விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 25
ஒலி 089 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 04 ஞாயிற்றுக்கிழமை (17.03.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

### வெடுக்குநாறி விவகாரம் தொடர்பில்
# ஜனாதிபதி ரணிலை சந்திக்க தமிழ்க் கட்சிகள் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)
வெடுக்குநாறியில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளவர்களின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதியைச் சந்திக்க தமிழ்க் கட்சிகள் தீர்மானித்துள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வர னின் இல்லத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரை யாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சிவராத்திரி தினத்தன்று வவுனியா - வெடுக்குநாறி மலையில் சிவ 19

### வெடுக்குநாறிமலை
## ஆலய பூசகர் உள்ளிட்ட ஐவரின் உணவுத் தவிர்ப்பு இடைநிறுத்தப்பட்டது
15ஆம் பக்கம் பார்க்க

# வெடுக்குநாறிமலை ஆதிசிவன் தமிழர்களின் வரலாற்று மரபுரிமை

## '107' தமிழர்களுக்கு அவசர தொலைபேசி இலக்கம்

(கொழும்பு)
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்காக 107 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னக்கோன் ஆகியோரின் தலைமையில் இந்த துரித இலக்கம் நேற்று அறிமுகம் செய்யப்பட்டது.

24 மணித்தியாலங்களும் செயற்பாட்டில் இருக்கும் 107 என்ற துரித இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி முறைப்பாடுகளை செய்ய முடியுமென தெரிவிக் கப்பட்டுள்ளது. 19

## கைதானவர்களை விடுவிக்கக்கோரி வவுனியாவில் மாபெரும் ஆர்ப்பாட்டம்



(வவுனியா) வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் விடுவிக்கக் கோரியும் பொலிஸாரின் அராஜகத்தைக் கண்டித்தும் வவுனியாவில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.
(19ஆம் பக்கம் பார்க்க)



## வெடுக்குநாறிமலையில் பொலிஸாரின் அடாவடித்தனம் கண்டனத்துக்குரியது
### யாழ்.கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு

(யாழ்ப்பாணம்)
சிவராத்திரித் தினத்தன்று வெடுக்குநாறி மலையில் பொலிஸாரின் அடாவடித்தனம் கண்டனத்துக்குரியது என யாழ். மறைவாட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் தலைவர் அருட்பணி எஸ்.வி.பி.மங்களராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் குறித்த ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில்,

இவ்வருடம் சிவராத்திரித் தினத்தன்று வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் உள்ள வெடுக்குநாறிமலையில் இந்துக்களின் புராதன வணக்கத்தலத்தில் 19

### 'இந்துக்களின் போர்'
## யாழ்.இந்து வெற்றி




04

### அல்லைப்பிட்டியில்
## நீரில் மூழ்கிய 10 வயது சிறுமி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
அல்லைப்பிட்டியில் நீரில் மூழ்கிய 10 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

இதில் அல்லைப் பிட்டி வெண் புரவி 19

### கட்டுநாயக்கவில்
## யாழைச் சேர்ந்த இளைஞன் கைது

(கொழும்பு)
போலி கடவுச்சீட்டில் கனடாவிற்கு தப்பிச்செல்ல முயன்ற யாழைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கட்டு நாயக்க விமான நிலையத்தில் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார். 19

## மோ.சைக்கிள் விபத்து; இளைஞன் உயிரிழப்பு
### பளையில் சம்பவம்

(பளை)
வீட்டுக் கேற்றில் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக் குள்ளான இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பளை இத்தாவில் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் இத்தாவில், பளையைச் சேர்ந்த 19

## லங்கா மஹறால்(PVT) LTD



உள்நாட்டு, வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை

லண்டன் - 990/=
பிரான்ஸ் - 1890/=
ஜேர்மனி - 1790/=
கனடா - 2290/=
அவுஸ்திரேலியா - 2450/=
சுவிஸ் - 2090/=
இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (101)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671 9**

WESTERN UNION MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் புணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

40,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
**077 8393 974**

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு சம்பியன் வீதியில் 1 பரப்பு 13 குழிக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
**076 702 3565** (118)

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற SILVER SHIELD SOCKS பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. moneytransfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-8544)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5392, 076 315 6470

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1989 ஆம் ஆண்டு பரணி நட்சத்திரம் கிரகபாவம் 22 செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் பணிபுரியும் (HNDIT) மணமகனுக்கு பொருத்தமான பணிபுரியும் மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகள் வடமராட்சிக்கு அண்மையில் வசிப்பவராக இருத்தல் விரும்பத்தக்கது. (111)

**077 864 9878, 077 634 3103**

## வேலையாள் தேவை சைவ உணவகம்

சமையலாளர் : அப்பம், மசாலாத் தோசை, ரொட்டி செய்ய உதவுபவர்
உதவியாளர் : உணவு பரிமாறுபவர்(பெண்கள்) (102)

**075 068 3810**

## விற்பனைக்கு

தையல் வேலை, அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான பொருட்கள் உடன் மலிவாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு (104)
**070 316 4214**

## புதிய காவலன் விவாக பொருத்துனர் புதிய காரியாலயங்கள்

உரும்பிராய் இராமகிருஷ்ணமிசன் கட்டிடத்தில் பல வருடகாலம் செயற்பட்டுவந்த "காவலன் விவாக பொருத்துனர்" நிலையம் மீண்டும் தனது சேவையை வடமராட்சி மக்களினதும், வலிகாமம் மக்களினதும் வசதி கருதி புதிய காரியாலயங்கள் செயற்படத் தொடங்கியுள்ளன. வடமராட்சியில் அல்வாய் சதாபொன்ஸ் கட்டிடத் தொகுதியிலும் வலிகாமத்தில் கோப்பாய் சந்தி பிள்ளையார் கடையிலும் கிளை நிலையங்கள் இயங்குகின்றன. எமது நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு உங்கள் பிள்ளைகளின் திருமணங்களைப் பொருத்திக் கொள்ளுங்கள். மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி மூலமாகவோ அல்லது ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த கிழமை நாட்களில் காலை 8.30 முதல் மாலை 4.30 வரை எங்களது காரியாலயங்களில் நேரில் வந்து சந்தியுங்கள். (C-8543)

மு.ப.முருகையா - உரும்பிராய்
**077 663 0273, 074 187 9127**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குலத்தைச் சேர்ந்த 1991 இல் பிறந்த பொறியியலாளராக பணிபுரியும் மணமகனுக்கு சைவபோசன (vegetarian) பட்டதாரி மணமகளை எதிர்பார்க்கின்றனர். (106)
கேட்டை 2 ஆம் பாதம், கி.பா - 14 1/2

**071 424 6307**

## சுத்திகரிப்பு, பராமரிப்பாளர் தேவை (House Keeping & Cleaner )

15 அறைகள் கொண்ட விடுதியைப் பராமரிக்கவும் சுத்தம் செய்யவும் வேலையாட்கள் தேவை.
(ஆண்கள் விரும்பத்தக்கது) (108)

**070 11 88 111**

## சமையல் உதவியாளர் தேவை

எமது உணவகத்திற்கு சமையல் உதவியாளர் தேவை.
(18-30 வயதிற்குட்பட்டவர்)
தங்குமிடம், உணவு இலவசம் (116)

**077 629 0894**

## விற்பனைக்கு

Toyota Townace வான் உடனடி விற்பனைக்கு உண்டு. 20-, பெற்றோல் வாகனம்

தொடர்புகளுக்கு (105)
**077 667 5080**

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 1943 . 12 . 19



மறைவு 2024 . 03 . 15

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வைரவப் புளியங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உப அதிபர் **திரு.சி.பரணீதரன்** அவர்களின் அன்புத் தாயார்

### அமரர் சிவநாதன் இராசமலர்

(தமிழ் சிறப்புப் பட்டதாரி, பேராதனைப் பல்கலைக்கழகம், நல்லூர் பிரதேச செயலகம், நெடுங்கேணி பிரதேச செயலகம், வவுனியா மாவட்டச் செயலகம் ஆகியவற்றின் முன்னாள் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்)

நிஜம் இன்றி நிழலில்லை – என்பது
பொய்த்துவிடும் படியாய் – உம்
நிஜம் இங்கு இல்லை என்றபோதும்
எம் நெஞ்சத்தில் என்றும் மறையாத
நிழலாகி மாறாத நினைவாகி
எம்மோடு வாழும் உம் உருவம்

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்தி அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய நண்பர்கள், உயர்தரப் பிரிவு**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி** (113)

## வேலையாள் தேவை

வடமராட்சியில் இயங்கும் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு Online இல் கணக்கீட்டு வேலையில் அனுபவம், ஆங்கில அறிவுடையவர் தேவை. (114)

**077 601 1135**
**077 703 7058**

## மெட்டி ஒலி திருமண சேவை

ஐரோப்பாவிலுள்ள மணமகன், மணமகள் (சூரிய-செவ்) படித்த மணமகள், மணமகன் தேவை. உங்கள் தகுதிக்கு ஏற்பவும் வரன் பார்த்துத் தரப்படும்.

தொடர்புகளுக்கு
**077 889 4353**
**077 335 2262**
**0094764752219**
(Whatsapp, Viber only) (112)

சிவமயம்



### ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் – நயினாதீவு

## கூறுவிலை கோரல்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் வட கடல் திருவருட் சின்ன தரிசன **மண்டபம்** அமைப்பதற்கான கூறுவிலை அறங்காவலர் சபையினால் கோரப்படுகின்றது. தகைமையுடையவர்கள் ஆலயத்துக்கு நேரடியாக வருகைதந்து வேலையினைப் பார்வையிட்டு கூறுவிலைப் படிவக் கட்டணமாக ரூபா 1000/= பணத்தினை செலுத்தி கூறிவிலைப் படிவத்தைப்பெற்று, பூரணப்படுத்தி 2024.03.29 ஆம் திகதி பி.ப 5.00 மணிக்கு முன்னர் ஆலயத்திற்குக் கிடைக்கக் கூடியதாக **"செயலாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு"** எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது கோயில் நிர்வாக பணிமனையில் வைக்கப்பட்டுள்ள **"கூறுவிலை கோரல்"** பெட்டியினுள் இடப்பட வேண்டும்.

குறிப்பு :

- பதிவு பெற்ற ஒப்பந்தகாரராக இருத்தல் வேண்டும்.
- ஆலயக்கட்டுமான வேலைகளில் முன் அனுபவம் இருத்தல் வேண்டும். இவற்றுக்கான சான்றிதழ்களின் பிரதி கூறுவிலையுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

திரு.ந.மோகனரூபன்,
செயலாளர்,
அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு.

(C-8541)

# எம் கல்வித் தாய்க்கு வயது 100

## யா/பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம் நூற்றாண்டு விழா 1924-2024

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம் என்ற பாடசாலை 2024.03.17 அன்று நூறு வருடங்களைப் பூர்த்தி செய்கின்றது. இப் பாடசாலை பருத்தித்துறை கடல் வாணிபம், கொட்டடிப் பிள்ளையார் கோயில், சைவ சமய மறுமலர்ச்சி மற்றும் கிறிஸ்தவ பாடசாலைகளின் அதிகமான தோற்றம் ஆகியவற்றுடன் பின்னிப்பிணைந்து உருவாகியது.

கொட்டடிப்பிள்ளையார் கோயில், பருத்தித்துறை சித்திவிநாயகர் என மக்களால் அழைத்து வரப்படுகின்றது. இவ் ஆலயத்தின் சைவ சமய மறுமலர்ச்சி இயக்கத்தினரால் இப் பாடசாலை சைவ சமயம் மற்றும் தமிழ் மொழியை வளர்க்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்டதாக வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன.

பருத்தித்துறையின் கல்வித் தாயாக விளங்கும் சித்திவிநாயகர் வித்தியாலயம் நூறு ஆண்டுகளிற்கு முன்னர் தெய்வப்பிள்ளை என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. இப் பாடசாலையின் தலைமை ஆசிரியராக திரு. சிவப்பிரகாசம் அவர்களும் உதவித் தலைமை ஆசிரியராக வித்துவான் கிருஷ்ணபிள்ளை அவர்களும் இருந்துள்ளனர்.

இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் பண்டிதர் மு. ஏரம்பமூர்த்தி அருட்பிரகாசம் சிதம்பரப்பிள்ளை அவர்களோடு இப் பாடசாலையின் முதலாவது பெண் ஆசிரியராக சின்னம்மா நாகரத்தினமும் கல்விப் பணியாற்றியுள்ளார்கள்.

19 ஆம் நூற்றாண்டிலே தாராண்மை வாதம், மானிட வாதம், பயன்வழிவாதம் ஆகிய கொள்கைகளை பிரித்தானிய உயர் ஆட்சியாளர்கள் பின்பற்றத் தொடங்கினர். இதன் காரணமாக ஏதோ ஒரு வகையில் கல்வி வளர வேண்டும் என அவ் ஆட்சியாளர்கள் விரும்பினார்கள். 1900 ஆண்டு காலப்பகுதிகளில் கல்வித் திணைக்களம் கல்வியமைச்சாக மாறியது.


இதனால் இலவசக் கல்வி, தாய் மொழிப் போதனை, கட்டாயக் கல்வி என்பன முக்கியம் பெற்றன. இந்தக் காரணங்களே சித்திவிநாயகர் வித்தியாலம் உருவாகுவதற்கான அடிப்படைக் காரணங்களாக விளங்கின.

இப் பாடசாலையின் வரலாற்றை நோக்கும் போது பருத்தித்துறை விநாயக முதலியார் தெருவிலே சின்னையா சட்டம்பியர் பாடசாலையை தவிர்த்து நோக்க முடியாது. அருணாச்சல வாத்தியார் இப்பாடசாலையின் கல்விப் பணியை மேற்கொண்டார்.

சின்னையா சட்டம்பியர் என்பவர் இயல்பிலேயே சமூகப் பணி செய்வதில் ஈடுபாடு உடையவர். அவர் இப் பாடசாலையிலே சாதி, மத பேதமின்றி சகலரையும் உள்வாங்கி கல்விப் பணியை மேற்கொண்டார்.

அந்தக் காலத்தில் இது மாபெரும் சமூக விடுதலை செயற்பாடாகக் காணப்பட்டது. ஆனால் அந்தப் பாடசாலை சின்னையா சட்டம்பியர் மற்றும் அவரது மகன் பஞ்சாட்சரம் ஆகிய இரண்டு தலைமுறையுடன் முடிவுற்றது.

அதன்போது சின்னையா சட்டம்பியர் பாடசாலை பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தோடு இணைக்கப்பட்டு அங்கு கல்வி கற்ற மாணவர்கள் மற்றம் ஆசிரியர்களும் இணைக்கப்பட்டனர்.




இதனால் சின்னையா சட்டம்பியர் பாடசாலை செய்த சமூக விடுதலைப் பணியை, தொடர்ந்து எமது கல்வித் தாயான சித்திவிநாயகர் வித்தியாலயம் மேற்கொண்டது.

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தின் ஆரம்ப காலங்களில் இப் பாடசாலையின் ஆசிரியர்களால் ஆரம்பிக்கப்பட்ட சைவ ஊழியர் சேவையாளர் சங்கம் இப் பகுதியில் பல சமூக செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர். இதன் ஒரு அங்கமாக 1951 ஆம் ஆண்டில் தமிழ் மொழி விழா நடத்தப்பட்டுள்ளது. இவ் விழாவில் தமிழ் நாட்டின் புகழ் பூத்த எழுத்தாளர் கல்கி அவர்கள் கலந்து கொண்டுள்ளார்.

அத்தோடு இந்தியாவின் பிரபல ஓவியர் மணியம் அவர்களும் கார்ட்ரூனிஸ்ட் மாலி அவர்களும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

1986 தொடக்கம் 1988 வரை நடந்த இடப்பெயர்வு காலப் பகுதியில் இவ் வித்தியாலயத்தின் ஆறு தொடக்கம் பதினோராம் தரம் வரையிலான வகுப்புக்கள் வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் ஒன்று தொடக்கம் ஐந்துரையான வகுப்புக்கள் தட்டாதெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும் நடைபெற்றன.

அந்த வகையிலே இப்பாடசாலை ஆரம்ப காலம் தொட்டு இன்றுவரை சந்தித்த சோதனைகள் சவால்கள் பலவற்றை குறிப்பிடலாம். இருந்த போதும் வெற்றிகளையும் சாதனைகளையும் தனதாக்கி நூற்றாண்டைத் தொட்டு உச்சத்தில் நிலை பெற்று நிற்கின்றது.

இன்று வரை தரம் ஐந்து புலமைப் பரிசில், கா.பொ.த சாதாரண தர பரீட்சைகளில் சிறந்த பெறுபேற்றினை மாணவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். பல வறிய மாணவர்களை இன்றும் கல்லூரித்தாய் அரவணைத்து மாபெரும் கல்விச் சேவையை வழங்கி வருகிறாள்.

அந்த வகையில் இப் பாடசாலையில் பணியாற்றிய பணியாற்றிக் கொண்டிருக்கும் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரின் அற்பணிப்பும் பாராட்டுக்குரியதே.


இணைப் பாடவிதான செயற்பாடுகளான ஜிம்னாஸ்ரிக் மற்றும் கபடி ஆகியவற்றில் மாகாண மட்டம், தேசிய மட்டங்களில் சாதனைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேலும் கலை நிகழ்வுப் போட்டிகளிலும் மாணவர்கள் வெற்றிகளைப் பெற்றுள்ளனர். இப் பாடசாலை தனக்குரிய போதிய வளங்களைக் கொண்டிராத போதும் இருக்கின்ற வளங்களின் உச்சபட்ச பயன்பாட்டைக் கொண்டு வீறுநடை போட்டு வருகின்றது. இருந்தபோதும் இந்நூற்றாண்டு விழாவில் பழைய மாணவர்களின் பங்களிப்பின் நிறைவு பாடசாலையின் வளர்ச்சியை மேலும் அதிகரிக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இட மில்லை.

நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் எமது கல்லூரித்தாய் மேலும் பல நூற்றாண்டுகளை கொண்டாடி பாரம்பரியமும் பெருமைகளும் நிறைந்த பருத்தித்துறையின் ஓர் உன்னதப் பாடசாலையாக திகழும் என்பதில் ஐயமில்லை. நூற்றாண்டு விழாக் காணும் எம் தாயை பாடசாலைச் சமூகம் வாழ்த்தி வணங்கி நிற்கின்றது.

**பாடசாலைச் சமூகம்**

# 'சூரர்' சுபர்ணனை போற்றுங்க


## 'இந்துக்களின் போர்' யாழ்.இந்து சம்பியன்




சுபர்ணனின் அசத்தலான சுழல் பந்துவீச்சு கைகொடுக்க கொழும்பு இந்துக் கல்லூரியை இன்னிங்ஸ் மற்றும் 100 ஓட்டங்களால் தட்டித் தூக்கியது யாழ்.இந்துக் கல்லூரி.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 13ஆவது "இந்துக்களின் போர்" கிரிக்கெட் ஆட்டம், நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயசுழற்சியில் வெற்றி பெற்ற




கொழும்பு இந்துக் கல்லூரி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

அதனடிப்படையில் துடுப்பெடுத்தாடிய, கொழும்பு இந்துக் கல்லூரி, அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து, 80 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் அணி சார்பில் அபிசேக் 14 ஓட்டங்களையும், நிதுஷான் 12 ஓட்டங்களையும், அதிகபட்சமாக பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சார்பில் சுபர்ணன் மற்றும் ஹரிஹரன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு, தனது முதலாம் இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, 56 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து, 240 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில், அணி சார்பில் பரிசித் 46 ஓட்டங்களையும், பிரேமிகன் 43 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில், கொழும்பு இந்துக் கல்லூரி சார்பில், நிதுசன், அபிஷேக் ஆகியோர், தலா இரு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க 160 ஓட்டங்களை பெற வேண்டிய நிலையில் பதிலுக்கு, தனது இரண்டாம் இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி, 32 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, 60 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில், கொழும்பு இந்துக் கல்லூரி சார்பில், டிலோஜன் 28 ஓட்டங்களையும், மிதுசிகன் 9 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சார்பில், சுபர்ணன் மற்றும் தரணிசன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

அந்தவகையில், 13 ஆவது இந்துக்களின் சமர் துடுப்பாட்டப் போட்டியில், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது. (ம-7,10)






# RAJESWARY HOMES (PVT) LTD

**MAKE YOU OWN PRIVATE LOUNGE IN TELLIPALAI**


**High residential area with a great investment Introducing Airport Lounge - Tellipalai by Rajeswary Homes Premium plots of land from the Heart of Tellipalai**





Features :

- ☑ 5 Min to JAFFNA International Airport - PALALY
- ☑ Approved Survey plan and COC
- ☑ Close proximity to all the Leading Schools, Banks and Supermarkets
- ☑ 20 feet wide developed road
- ☑ Electricity
- ☑ Clear deeds
- ☑ Well developed 11 premium plots



(C-8546)

**Call us now on 0770 767 114**


## 'வடக்கின் பெரும் போர்' ஒருநாள் தொடர்

## மத்தியின் மைந்தர்கள் சம்பியன்




வடக்கின் பெரும் போர் துடுப்பாட்ட போட்டியின் 21ஆவது ஒருநாள் துடுப்பாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 4 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான வடக்கின் பெரும் போர் துடுப்பாட்ட போட்டியின் 21ஆவது ஒருநாள் துடுப்பாட்டப்போட்டி நேற்று யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடி அனைத்து விக்கெட்களையும் இழந்து

116 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. அணி சார்பிலே அபியோசுவாந் 30 ஓட்டங்களையும் ஜெபநேசர் ஜெசில் 28 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சார்பில் முரளி திசோன் 4 விக்கெட்களையும் அஜே மற்றும் நியூட்டன் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 6 விக்கெட்டுக்களை இழந்து ஓட்டங்களைப் 118 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

அணி சார்பில் துடுப்பாட்டத்தில் அருள் சீலன் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும் டெரிக்சன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி சார்பில் கவிசன் 3 விக்கெட்டுகளை அதிகபட்சமாக கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்ட நாயகனாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வீரர் முரளி திசோன் தெரிவானார். (ம-7,10)


## நாகபூஷணி திருமண சேவை

**உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்தமாக உடன் எம்மால் தெரிவு செய்து தரப்படும்.**

**இல.264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

(115) **077 138 7596, 071 999 9306**

## மகளிர் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் தொழிற் சங்கத்தின் சர்தேச மகளிர் தினத்தை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு பருத்தித்துறை வீதி கல்வியங்காடு திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் வட மாகாண மற்றும் யாழ்.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தலைவர் திருமதி.யோ. கேமநளினி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல் கலைக்கழக கல்வியற்துறை பேராசிரியர் ஜெ. இராசநாயகம், சிறப்பு விருந்தினர்களாக, வட மாகாண கல்வித்திணைக்கள மேலதிக நிர்வாக கல்விப் பணிப்பாளர் திருமதி. த. உமா, யாழ். தேசிய கல்வியற் கல்லூரி ஓய்வு நிலை பீடாதிபதி கலாநிதி. சுப்பிரமணியம் பரமானந்தம், வட மாகாண ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு பணிப்பாளர் செல்வி. ஜெயா.தம்பையா, செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு திருமுருகன், யாழ். மாநகரசபை முன்னாள் முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ச. சுகிந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (5-6)

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு(உடுவில்) பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட, பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வலிகாமம் தெற்கு (உடுவில்) பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. என அச் சங்கத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். (5-6)



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினரால் வடமராட்சி கிழக்கில் நேற்று குருதிக்கொடை முகாம் முன்னெடுக்கப்பட்டது. (படம்- மகாலிங்கம்)

## மீனவரைக் காணவில்லை

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணியை சேர்ந்த கடற்றொழிலாளர் ஒருவர் நேற்று அதிகாலை கடலில் தொழிலுக்கு சென்ற நிலையில் இன்னும் கரை திரும்பவில்லை. அவர் சென்ற தெப்பம் மட்டும் கரையோதுங்கி உள்ளது

மருதங்கேணி வடக்கைச் சேர்ந்த 60 வயதுடைய முத்துச்சாமி தவராசா என்பவரே காணாமல் போயுள்ளார் அவரை தேடும் பணியில் மீனவர்களும் கடற்படையினரும் ஈடுபட்டுள்ளனர். (நி-60)

# வடமராட்சி கிழக்கு கடலில் கரையொதுங்கிய மிதவை




(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் கடற்பகுதியில் அந்தியேட்டிக்கிரியை நிறைவேற்றப்பட்ட மிதவை ஒன்று நேற்று காலை கரையொதுங்கியுள்ளது. பரமேஸ்வரி , என்னை நிம்மதியாக போகவிடுங்கள் சகோதரர்களே போன்ற வாசகங்கள் எழுதப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபரின் இறுதிச் சடங்கிற்காக இது வடிவமைக்கப்பட்டு கடலில் விடப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-60)

# தகவல் தொடர்பாடல்,தொழில்நுட்பவியல் கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் கற்கை நெறிக்கான சான்றிதழைப் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக் கற்கை நெறிகள் மாவட்ட அலுவலக கணனி பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16 -25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி 2024.04.25. க.பொ.த (சா/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம் ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடனும் க.பொ.த(உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருக்க வேண்டும்.

இக்கற்கை நெறிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள் மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல.44, சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும் மேலதிக விபரங்களுக்கு 021 222 2383 அல்லது 071 455 3772 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார். (நி)


## மயிலிட்டி கிராம அபிவிருத்தி சங்கம் (RDS) மீள்குடியேற்றக்குழு இணைந்த செயற்பாட்டில்

விடுவிக்கப்படாத இடங்கள் விடுவிப்பதற்கான சாத்தியம் தென்படுவதால் J/251 - J/248 இல் விடுவிக்கப்படாத இடத்தின் மக்கள் தங்கள் உறுதி இலக்கத்துடன் தங்கள் கையொப்பத்தையும் நேரில் வந்து பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்

- மார்ச் 22, 23 (வெள்ளி, சனி) திகதியில் மயிலிட்டி கடற் தொழில் சங்கக் காரியாலத்தில் காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை மாலை 3 மணி தொடக்கம் 5மணி வரை.
- மார்ச் 24 (ஞாயிறு) மயிலிட்டி கிராம சேவகர் காரியாலயத்திலும் காலை 9.30 தொடக்கம் 12 மணி வரை, 2 மணி தொடக்கம் 4 மணி வரை பதிவு செய்யப்படும்.

செயலாளர்,
மயிலிட்டி கிராமிய அபிவிருத்திச் சங்கம்

(080)


# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 - 02 - 1972 | 16 - 03 - 2024 |



## திருமதி. தெய்வேந்திரம் மகேந்திரராணி(கலா)

(பெண் பரிசாரகர், சங்கானை, பண்டத்தரிப்பு,காரைநகர் பிரதேச வைத்தியசாலை )

சங்குவேலியை பிறப்பிடமாகவும் தேவாலய வீதி சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் மகேந்திரராணி(கலா) 16.03.2024 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணர்- தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், தெய்வேந்திரம்(ராசன்) அவர்களின் அன்பு மனைவியும் அனந்தகோபன்(அனந்தன்), ஆதித்தியன்(ஆதி), ஆதவன் (மாணவன் யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி), அரிராம்(மாணவன் யா/ இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலச்சந்திரன் (சந்திரன்), ராஜினி(பிள்ளையம்மா), பூலோகம் (பெற்றி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.03.2024 இன்று ஞாயிற்றுக்கிழமை தேவாலய வீதி சங்கானையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தேவாலய வீதி,
சங்கானை.

(107)

தகவல்
குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உப அதிபர்
திரு.சி.பரணீதரன் அவர்களின் அன்புத் தாயார்

## அமரர்.சிவநாதன் இராசமலர்

(முன்னாள் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்
மாவட்ட செயலகம் வவுனியா)



அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னை மடியில்–1943.12.19
ஆண்டவன் அடியில்– 2024.03.15

(சி-8540)

உங்கள் பிரிவால் துயருறும்,
ஆசிரியர் கழகம்,யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

# தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன




(கொழும்பு)

2021/2022 கல்வியாண்டில் உயர் தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு மாணவர்களை உள்வாங்குவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் இணைய வழி முறையின் ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், தகுதியானவர்கள் தேர்வும் இம்முறை இணையவழி ஊடாக நடை பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த விண்ணப்ப பதிவு நடவடிக்கைகள் எதிர்வரும் 05ஆம் திகதியுடன் நிறையவடையவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)


# மணிவிழா வாழ்த்து



திருமதி.

## சாந்தினிதேவி ஜீவதரன்

B.A,PGDE இந்துநாகரிக ஆசிரியர்

[சிரேஸ்ட இடைநிலைப் பிரிவு பகுதித்தலைவர்]

ஆசிரிய சேவையில்

1992.09.01-2014.01.19 வரை
யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி
2014.01.20-2024.03.17 வரை
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை

கற்றறிந்த வித்தையினை வித்தாரமாய் விதைத்து
கல்விப் பணியே கடவுட் பணியென
எண்ணிலா மாணவருக்கு எளிதாய் போதித்து
வாழ்வில் ஏற்றமுற ஏற்றி வைத்த எங்கள்
கல்விச் சுடர் ஒளியே எந்நாளும் நோய் நொடியின்றி
பல்லாண்டு காலம் பார் புகழ வாழ
மனமார வாழ்த்துகின்றோம்.

32 வருடங்கள் கல்விச் சேவையில் பணியாற்றி
ஒய்வுபெறும் திருமதி.சாந்தினிதேவி ஜீவகரன்
அவர்கள் ஒய்வுக் காலத்தில் சீரும் சிறப்புமாக
நோய்நொடியின்றி வாழ
உளமார வாழ்த்துகின்றோம்.

(043)

வாழ்த்துவோர்:-பாடசாலைச் சமூகம்,
யா/பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை.



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு :1991 - இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: -
உயரம்: 165cm
தகைமை/தொழில்: பட்டதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்.
தொ.இ: B/14151

பிறப்பு:1993 -இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 12 1/2 சூரி செவ் 3 இல்
உயரம்: 5' 8"
தகைமை/தொழில்- BBM, MSC, Lap Assitant(pvt)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/14152

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: -
உயரம் : 179 cm
தகைமை/தொழில்: Industrial Mechanic, Mechanical Engineer (Germany)
எதிர்பார்ப்பு: படித்த அழகான பெண்
தொ.இ: B/14153

பிறப்பு: 1993 - இந்து
நட்சத்திரம் : அத்தம்
கி.பா: 44
உயரம்: 6'
தகைமை/தொழில்:- MSC, Audit Manager(pvt)(London)
எதிர்பார்ப்பு: uk Only , படித்த பெண்
தொ.இ: B/14155

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1996 -இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா- 2 சூரி செவ் 5 இல்
உயரம்: 5' 3"
தகைமை/தொழில்: BA(பட்டதாரி)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம் மட்டும் (பட்டப்படிப்பு)
தொ.இ: G/14344

பிறப்பு-1990 -இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: - 31
உயரம் : 5' 4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு (கனடா, லண்டன்)
தொ.இ: G/14345

பிறப்பு -1994 - இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா:- 69 சூரி செவ் 1 இல்
உயரம் : 155cm
தகைமை/தொழில்: HND Civil Engineer தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர்.
எதிர்பார்ப்பு: உத்தியோகம் (உள்நாடு/வெளிநாடு)
தொ.இ: G/14347

பிறப்பு -1994 -இந்து
நட்சத் திரம் - மூலம்
கி.பா: 44 1/4
உயரம்: 5' 1"
தகைமை/தொழில்: BSC (Hons) in Business and Management studies, Manager (pvt)
எதிர்பார்ப்பு : பட்டதாரி
தொ.இ: G/14348

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இராசிபலன்

17.03.2024
பங்குனி 04, ஞாயிற்றுக்கிழமை
அட்டமி பின்னிரவு 3.13 மணிவரை

மிருகசீரிடம் முன்னிரவு 9.50 மணிவரை
சுபநேரம் -9.19-10.49 மணிவரை
இராகுகாலம்-4.49-6.19 மணிவரை

சந்திராஷ்டமம்
சித்திரை, சுவாதி.

வளவன்

**மேஷம்** உறவினர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பகையொன்று நட்பாகலாம், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பணப் புளக்கம் அதிகரிக்கும் நாள், வியாபார விருத்தியுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**கடகம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுபகாரியப் பேச்சுக்களில் தாராளம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொழில் வருமானத்தை அதிகரிக்க புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**கன்னி** புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**துலாம்** உறவினர் வழியில் மனநிறைவான செய்தியொன்று வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம்.

**விருச்சிகம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு** குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள்.

**மகரம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**மீனம்** உறவினர்களின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


நீயும் வாழ் பிறரையும் வாழ விடு இது அகிம்சையின் தத்துவம்.

Registered as a Newspaper in Srilanka
விலை : 60.00
வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 432
Viber 076 636 3378
வள்ளுவர் ஆண்டு 2055 17.03.2024 தொலைபேசி : 021 222 3378








## சிவனைச் சீண்டும் சிங்களப் பேரினவாதம்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## இந்துகலாசாரத் திணைக்களம் கலைக்கப்பட வேண்டும்

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில பொலிஸார் நடந்து கொண்ட மிலேச்சத்தனமான செயலை ஆலடி மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

அதிலும் வெடுக்குநாறிமலையில கைது செய்யப்பட்ட அர்ச்சகர் உள்ளிட்டவர்களுக்கு கைகளில விலங்கிட்டவாறு சிகிச்சை வழங்கப்படுவது மிகவும் கொடுமையான செயல்.

எனவே இது விடயத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் நேரடியாகத் தலையிட வேண்டும் என ஆலடியில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவம்.

இவ்வாறு பண்டிதர் கூற அனைவரும் எழுந்து நின்று தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றினர்.

தொடர்ந்து ஆலடியில் நிசப்தம் நிலவியது. நிசப்தத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:-** அதுசரி, வெடுக்குநாறிமலையில வைத்து கைது செய்யப்பட்டவர்களுக்காக ஒரு தொடர் போராட்டத்தை ஆரம்பிக்கலாம் தானே!

**கங்காணி:-** எங்களுக்குத் தேவை கைது தான். இனி கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கிறதுக்கு அவரவர் குடும்பங்கள் தான் அலைய வேணும்.

இந்த அநியாயங்களால தானே எங்கட போராட்டங்களும் அஸ்தமித்துப் போனது.

**மூப்பர்:-** என்ன கங்காணியார் சொல்லுறியள்.

**கங்காணி:-** மூப்பர் எங்கட ஆட்கள் அரோகராச் சொல்லிக் கலை ஆட வைப்பினம். கலை ஆடும் போது அனைவரும் ஆ... .. கூ... எண்டு கத்துவினம்.

சன்னதம் ஆடினவர் விழுந்தால் அவ்வளவு தான். செத்தமாட்டில இருந்து உண்ணி கழண்ட மாதிரி மெல்ல நழுவி விடுவினம்.

**சாத்திரியார்:-** அதெண்டால் உண்மைதான். முன்பு மற்றவர்களின்ர பிள்ளைகளைப் போராட்டங்களுக்கு அனுப்பிப் போட்டுத் தங்கட பிள்ளைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பினவயள் இருக்கினம் தானே!

**சிறாப்பர்:-** வெடுக்குநாறி மலையில நடந்த அட்டூழியத்தைக் கண்டித்து எங்கட தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தைப் புறக்கணித்து, அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேணும் எண்டு எங்கட அகத்தியர் அடிகளார் கோரிக்கை விடுத்துள்ளாரல்லோ.

**சாத்திரியார்:-** இதெல்லாம் நடக்கிற காரியமோ. எங்கட பாராளுமன்ற உறுப்பினர்களும் அரசியல்வாதிகளும் அந்த இடத்தில வந்து நிற்பினம். அவ்வளவு தான். அதிலும் பாராளுமன்றத்திற்குப் போகாமல் நிண்டு போராட்டம் நடத்துங்கள் அல்லது பாராளுமன்றப் பதவியை ஒட்டுமொத்தத் தமிழ் எம்.பிக்களும் இராஜினாமாச் செய்யுங்கள் எண்டு ஒருக்காக் கேட்டுப் பாருங்க.

அவயளுக்குக் கடும் கோபம் வரும். இந்தளவில தான் எங்கட நிலைமை இருக்குது.

**மூப்பர்-** அப்ப இதுக்கு என்ன தான் வழி.

**சாத்திரியார்:-** முதலில சர்வமதப் பேரவையில இருந்து எங்கட சைவ சமயத்தவர்கள் விலக வேணும்.

அதோட, இந்து-பௌத்த நல்லிணக்க அமைப்பைக் கலைக்க வேணும்.

ஜனாதிபதியின் விசேட ஆலோசகர், சமய விவகாரங்களுக்கு பொறுப்பானவர் எண்டிருக்கக் கூடிய சிவாச்சாரியர்கள் அந்தப் பதவியில இருந்து உடனடியாக விலக வேணும்.

இந்து சமய கலாசாரத் திணைக்களத்தைக் கலைக்குமாறு கோசம் போட வேணும். இதைச் செய்தால் எல்லாம் சரியா வரும்.

இவ்வாறு சாத்திரியார் சதாசிவம் கோபாவேசத்துடன் கூற, ஆலடி அமைதியாகிற்று.

அமைதியைக் குலைக்க பண்டிதர் பரமலிங்கம் குரல் கொடுத்தார்

**பண்டிதர்:-** அது சரி இந்துகலாசாரத் திணைக்களத்தைக் கலைக்க வேணும் எண்டு ஏன் சாத்திரியார் சொல்லுறியள்.

**சாத்திரியார்:-** இந்து கலாசாரத் திணைக்களம் எண்டைக்கு வந்ததோ அண்டைக்கு எங்கட ஆலய நிர்வாகங்கள் அடிபடத் தொடங்கிற்று.

சைவாலயங்களைப் பதிவு செய்யிற நடைமுறை எல்லாம் சைவ சமயத்தைத் தங்கட கட்டுப்பாட்டிற்குள்ள வைத்திருக்கிறதுக்கான வேலை தானே!

**கங்காணி:-** ஏன் சாத்திரியார் இந்து கலாசாரத் திணைக்களம் இந்துக் கோயில்களுக்கு நிதி உதவி வழங்குது தானே!

**சத்திரியார்:-** ஓ... ஒரு லட்சம் ரூபாயைக் கொடுத்திட்டு நூறு தடவை அறிக்கை கேட்பினம். பரிபாலன சபையை அடிக்கடி கூப்பிட்டுக் கூட்டம் வைப்பினம்.

அதோட ஆட்சியாளர்களின்ர நிகழ்ச்சிகளுக்கு ஆசி வழங்குவதற்கு சிவாச்சாரியார்களை ஒழுங்குபடுத்துவினம்.

அவர்களை வெறுக்க முடியாமல், சிவாச்சாரியார்களும் கலாசார உத்தியோகத்தர்களுக்கு முன்னால போய் குந்தியிருப்பினம்.

இந்த மரியாதை கெட்ட வேலையை பௌத்த பிக்குகள் செய்வினமோ. கத்தோலிக்க பாதர்மாரிட்ட நடக்குமோ.

ஆகையால என்னைப் பொறுத்த வரை இந்து ஆலயங்களில கலாசார உத்தியோகத்தர்களின்ர தலையீட்டை முற்றாகத் தடுக்க வேணும்.

எல்லா பரிபாலன சபையும் அதனை புறந்தள்ள வேணும்.

**விதானையார்:-** சாத்திரியார் சொல்லுறதிலும் நியாயம் இருக்கத் தான் செய்யுது.

வெடுக்குநாறி மலையில பொலிஸாரின்ர அடாவடித்தனம் நடந்த போது, இந்துக் கலாசாரத் திணைக்களம் என்ன செய்தது. ஏன்? எங்கட கலாசார உத்தியோகத்தர்களாவது அதனைக் கண்டித்திருக்கலாம் தானே.

அப்ப கலாசார உத்தியோகத்தர்கள் தங்கட மாதச் சம்பளத்துக்கு அறிக்கை கொடுப்பதற்காகத் தானே இந்து ஆலயங்களைப் பயன்படுத்துகினம்.

**வாத்தியார்:-** நீங்கள் என்ன சொன்னாலும் எங்கட சிவாச்சாரியர்கள் ஜனாதிபதி மாளிகையில நடக்கிற நிகழ்வுகளுக்குப் போகத்தான் போகினம்.

கொழும்பில இருக்கிற அவையளுக்கு வடக்கில உள்ள சைவ சமயம் பற்றி எந்தக் கருசனையும் இல்லை. அவையளுக்கு கௌரவம், மதிப்பு இது தான் தேவை.

இப்படி வாத்தியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப்பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# அவதியுறும் ஆதிலிங்கேஸ்வரர்





**அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்பது மாறிவிட்டது. இப்போது தெய்வமும் அன்றே கொல்லும் என்றாகி விட்டது. இதற்கு ராஜபக்ஷக்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் தக்க உதாரணமாகின்றது.**

ஒரு விடயம் தொடர்பில் பிரச்சினை எழுகிறது என்றால் அவ்விடயத்தை நடு நிலையுடன் நின்று அதில் உள்ள நீதியை சீர்தூக்கிப் பார்த்து அதற்கு தக்க பதிலை வழங்க வேண்டியது அந்த நாட்டின் ஆட்சியாளர்களின் கடமை.

அதை விடுத்து எதிர்மறையான செயற்பாடுகளை ஊக்குவிக்கும் எந்தவொரு நடைமுறையும் ஆரோக்கியமான விளைவுகளைத் தராது என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் விவகாரமும் இதைப் போன்றதொரு விடயமே.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் தமிழர்களின் பூர்வீகங்களின் வெளிப்பாடு. அதை எந்த வகையிலும் விட்டுக்கொடுக்க தமிழினம் தயாரில்லை.

கொஞ்சம் கொஞ்சமாக தமிழினத்தின் பூர்வீகங்களை கபளிகரம் செய்யும் செயற்றிட்டத்தில் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரரை அபகரிக்கும் செயல் நீண்டு செல்வது பேரினவாத சக்திகளுக்கு பெரும் தலையிடியே.

காலம் காலமாக தமிழரின் பூர்வீகமான பிரதேசங்களை அபகரித்துக் கொண்டிருக்கும் பேரினவாத சக்திகள் தமிழினத்தின் தொன்மைகளை அழித்தொழிப்பதிலும் அபகரிப்பதிலும் காட்டிய கரிசனையினை அவர்களின் பிரச்சினைகள் மீது வைக்காதது துரதிஷ்டமே.

சிவராத்திரி பூசை வழிபாடுகளை மேற்கொள்வதற்காகச் சென்ற பூசகர் உள்ளிட்ட பக்தர்களை தாக்கி, அவர்களைக் கோவிலுக்குச் செல்ல விடாமல் தடுத்து, அபிஷேகப் பொருட்களை நிலத்தில் வீழ்த்தி அவர்களை குண்டுக்கட்டாய் தூக்கிச் சென்று சிறையில் அடைக்க வேண்டிய தேவை, எது என்பதை தெளிவுபடுத்த வேண்டியவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

கைது செய்யப்பட்ட பூசகர் உட்பட எட்டுப்பேரையும் கைவிலங்கிட்டபடி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டது கொடுமையிலும் கொடுமை.

சிவனுக்கு வைத்தியநாதன் என்று பெயருண்டு. அருவமும் உருவமுமான சிவனின் தத்துவமும் அதுவே.

வெடுக்குநாறிமலை உச்சியில் வீற்றிருக்கும் அந்த வைத்திய நாதனை வழிபடச் சென்றவர்களைக் கைது செய்து விலங்கிட்ட படி அவர்களுக்கு வைத்தியம் பார்ப்பதை என்னவென்று கூறிவிட முடியும்.

வெடுக்குநாறி விவகாரத்தில் பொலிஸாரின் அடாவடித்தனத்தைக் கண்டித்து கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் நல்லூரிலும் நேற்று முன்தினம் வவுனியாவிலும் கண்டனப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் ஏற்பாட்டின் நடைபெற்ற குறித்த கண்டனப் போராட்டத்தில் ஆன்மீகத் தலைவர்கள், அரசியல்வாதிகள், சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு வெடுக்குநாறி விவகாரத்திற்கு நீதிவேண்டி நின்றனர். வெடுக்குநாறி விவகாரத்தில் கைது செய்யப்பட்டவர்கள் தமக்கு நீதி வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில் குறித்த விவகாரத்தை விசாரணை செய்ய குழு ஒன்றை அமைப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரி வித்திருக்கின்றார்.



இந்துக்களின் புனித நாளான மகா சிவராத்திரி தினத்தில் பூசை வழிபாடு களுக்காகச் சென்றவர்களை தாக்கி கைது செய்வதென் பது நன்கு திட்டம் தீட்டி மேற்கொள்ளப்பட்ட விடயம் என தமிழ் அரசி யல் தலைவர்கள் கூறும் விடயத்திற்குள் உண்மை இருக்கவே செய்கிறது.

தையிட்டியில் அமையப் பெற்ற விகாரை சட்ட விரோதமானது எனத் தொடர் போராட்டங்களை மேற்கொண்டவர்களை அச்சுறுத்தி குறித்த விகாரைக்குப் பாதுகாப்பு வழங்கிய பாதுகாப்புத் தரப்பினர் நீதிமன்ற அனுமதியைப் பின்பற்றி சென்றவர்களைத் தாக்கி அவர்களைக் கைது செய்திருக்கிறார்கள் எனின் இவ்விடயத்திற்குள் இருக்கும் இன-மத வன்மத்தை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

மறுக்கப்பட்ட தனது நீதிக்காய் தமிழினம் போரிட்டது. அதன்விளைவு முள்ளிவாய்க்கால் எனும் மரண பூமியை பிரசவித்தது. முள்ளிவாய்க்கால் முற்றமே எம் இன அழிப்பின் அடையாளமாய் இன்றுவரை இருந்து வருகிறது.

மிகப்பெரும் இன அழிப்பை மேற்கொண்ட பேரினவாத சக்திகள் அதன்பின் அவர்களின் பூர்வீகங்களை அழித்தொழிப்பதிலும் கையகப்படத்துவதிலும் தீவிரம் காட்டி வருகின்றனர், எனின் இப்பிறப்பில் தமிழினத்திற்கு நீதியைத் தரத் தயார் இல்லை என்பதே பொருள்.

அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்பது மாறி விட்டது. தெய்வமும் அன்றே கொல்லும் என்றாகிவிட்டது. இதற்கு ராஜபக்ஷக்களின் எழுச்சியும் வீழ்ச்சியும் தக்க உதாரணமாகின்றது.

அபிமன்யு

## காலத்தால் அழியாத கானங்கள்

**படம்: ஊமை விழிகள்**
**இயற்றியவர்: ஆபாவாணன்**
**இசை: மனோஜ் கியான்**
**பாடியவர்: பி.பி.ஸ்ரீனிவாஸ்**



தோல்வி நிலையென நினைத்தால் மனிதன்
வாழ்வை நினைக்கலாமா?
தோல்வி நிலையென நினைத்தால் மனிதன்
வாழ்வை நினைக்கலாமா?

வாழ்வை சுமையென நினைத்து தாயின்
கனவை மிதிக்கலாமா?
உரிமை இழந்தோம் உடமையும் இழந்தோம்
உணர்வை இழக்கலாமா?
உணர்வைக் கொடுத்து உயிராய் வளர்த்த
கனவை மறக்கலாமா?

தோல்வி நிலையென நினைத்தால் மனிதன்
வாழ்வை நினைக்கலாமா?

விடியலுக்கில்லை தூரம் விடியும்
மனதில் இன்னும் ஏன் பாரம் உன்
நெஞ்சம் முழுவதும் வீரம் இருந்தும்
கண்ணில் இன்னும் ஏன் ஈரம்

உரிமை இழந்தோம் உடமையும் இழந்தோம்
உணர்வை இழக்கலாமா?
உணர்வைக் கொடுத்து உயிராய் வளர்த்த
கனவை மறக்கலாமா?

தோல்வி நிலையென நினைத்தால் மனிதன்
வாழ்வை நினைக்கலாமா?
வாழ்வை சுமையென நினைத்து தாயின்
கனவை மிதிக்கலாமா?

விடியலுக்கில்லை தூரம் விடியும்
மனதில் இன்னும் ஏன் பாரம்? உன்
நெஞ்சம் முழுவதும் வீரம் இருந்தும்
கண்ணில் இன்னும் ஏன் ஈரம்?

யுத்தங்கள் தோன்றட்டும் ரத்தங்கள் சிந்தட்டும்
பாதை மாறலாமா?
ரத்தத்தின் வெப்பத்தில் அச்சங்கள் வேகட்டும்
கொள்கை சாகலாமா?
உரிமை இழந்தோம் உடமையும் இழந்தோம்
உணர்வை இழக்கலாமா?
உணர்வைக் கொடுத்து உயிராய் வளர்த்த
கனவை மறக்கலாமா?

யுத்தங்கள் தோன்றட்டும் ரத்தங்கள் சிந்தட்டும்
பாதை மாறலாமா?
ரத்தத்தின் வெப்பத்தில் அச்சங்கள் வேகட்டும்
கொள்கை சாகலாமா?

# அச்சுறுத்தும் தொலைபேசிப் பாவனை

**உடல் எடை தாண்டியும், மொபைலால் ஏற்படக்கூடிய உடல்நலப் பிரச்சினைகள் பல உள்ளன. செல்போனை அதிகமாகப் பயன்படுத்தும்போது அதிலிருந்து வெளியேறும் கதிர்வீச்சால் பாதிப்பு ஏற்படும்**

தற்போது, அனைத்து வயதினரும் பயன்படுத்தும் சாதனமாகிவிட்டது மொபைல் போன். ஆராய்ச்சி ஒன்றின் முடிவில், 5 மணி நேரத்திற்கும் மேலாக செல்போன் பயன்படுத்துகிறவர்களுக்கு உடல் எடை அதிகரிப்பதற்கான வாய்ப்பு 43% உள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

"செய்திகள், மீம்கள், பாடல்கள், தகவல் பரிமாற்றங்கள் என ஒரு மனிதன் தன் பொழுதை நகர்த்தத் தேவையான அனைத்தும் ஒரே இடத்தில், உடனடியாகக் கிடைக்கும்போது மனம் அதையேதான் விரும்பும். அங்கேயேதான் கிடக்கும். அப்படித்தான் நாம் செல்போனுடன் கட்டுண்டு கிடக்கிறோம். ஆனால் அந்தப் பழக்கம் சரி செய்யப்பட வேண்டிய தவறு.

ஸ்மார்ட்போன் மற்றும் உடல்பருமன் குறித்துப் பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. அதீத செல்போன் பயன்பாட்டால் உடல் பருமன் ஏற்படுவது பற்றி பல ஆராய்ச்சிகளின் முடிவில் நிரூபிக்கப்பட்டும் உள்ளது. அடிப்படைக் காரணம் இதுதான். செல்போனில் நாம் செலவிடும் நேரத்தில் எந்த உடற்பயிற்சியும் செய்வதில்லை. பல மணி நேரமாக உடல் எந்த அசைவுமின்றி இருக்க விரல்கள் மட்டுமே இயங்கிக் கொண்டிருக்கும்.


அதுமட்டுமன்றி சமூக வலைதளங்களில் அதிக நேரம் செலவிடும்போது ஒருவர் போடும் போஸ்டுக்கு எத்தனை லைக்ஸ் வந்துள்ளது இன்ஸ்டா ஸ்டோரியை எத்தனை பேர் பார்த்துள்ளார்கள் என்று மனம் அதைப் பற்றியே சிந்தித்திக்கொண்டிருப்பதால் அவர்களுக்கு அது குறித்த கவலை மற்றும் மன அழுத்தம் போன்றவை ஏற்படுகின்றன.

இதனால், சிலருக்கு அந்த மனநிலையில் ஏதாவது சாப்பிடத் தோன்றும். சாப்பிட்டு முடித்ததும் சிலர் தங்கள் மன அழுத்தம், கவலை விடுபட்டதாக உணர்வார்கள். குறிப்பாக இதுபோன்ற நேரங்களில் அவர்கள் இனிப்புப் பொருட்கள், துரித உணவுகள் போன்ற உடலுக்கு நன்மை தராத உணவுகளை அதிகம் சாப்பிடுவார்கள். இப்படி ஒரே இடத்தில் உடல் இயக்கமின்றி இருப்பதும், அதிகமாகச் சாப்பிடுவதும் உடல் எடை அதிகரிக்க வழிவகுக்கிறது.

உடல் எடை தாண்டியும் மொபைலால் ஏற்படக்கூடிய உடல்நலப் பிரச்சினைகள் பல உள்ளன. செல்போனை அதிகமாகப் பயன்படுத்தும்போது அதிலிருந்து வெளியேறும் கதிர்வீச்சால் பாதிப்பு ஏற்படும். குழந்தைகள் அளவுக்கு அதிகமாக செல்போனைப் பயன்படுத்தும்போது அவர்களது நினைவாற்றல் மற்றும் செயல்திறன் பாதிக்கப்படும். பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன் அவர்களிடம் இல்லாமல் போய்விடும்.

குழந்தைகள், பெரியவர்கள் என அனைவரின் உறங்கும் நேரம் தாமதிக்கப்படும், தூக்கம் பாதிக்கப்படும். பொதுவாக நாம் தூங்க மெலடோனின் என்ற ஹார்மோன் சுரக்க வேண்டும். அதற்கு இருட்டான சூழல் தேவைப்படும். ஆனால், இரவு நேரத்தில் மொபைல் பயன்படுத்தும்போது வெளிப்படும் வெளிச்சம் இந்த ஹார்மோன் சுரப்பைத் தடைப்படுத்தும். தூக்கம் குறையும், தொலையும். இதன் விளைவாகவும் உடல் பருமன் ஏற்படும். மேலும் கழுத்து வலி, கைவலி, கண் தொடர்பான பிரச்சினைகளையும் மொபைல் பயன்பாடு ஏற்படுத்தும்.

இன்றைய சூழ்நிலையில், மொபைல் பயன்பாட்டைத் தவிர்க்க முடியாது என்றாலும் அளவுக்கு அதிகமாக அதில் நேரம் கரையாமல் இருக்க சுயகட்டுப்பாடு வேண்டும். கடிவாளம் வேண்டும். இல்லை யெனில் நாம் கொடுக்கும் விலை நம் ஆரோக்கியம் ஆக, அப்பப்ப... தொடர்பு எல்லைக்கு வெளியேயும் சென்று வருவோம்!



# களம் பல கண்ட யாழ் கோட்டை



**03** செங்கை ஆழியான்

நல்லூரில் சமதரையில், கிளர்ந்தெழும் தமிழர்களுக்கு மத்தியில் தங்கியிருப்பதிலுள்ள பாதுகாப்பின்மையைப் போர்த்துக்கேயத் தளபதி புரிந்துகொண்டான்.

தானும், தனது படைவீரர்களும், பறங்கிகளும் தங்கியிருப்பதற்குப் பாதுகாப்பான ஒரு கோட்டை இருக்க வேண்டியதன் அவசியத்தை ஒலிவேறாவுக்குத் தொடர்ந்து நிகழ்ந்த தாக்குதல்கள் உணர்த்தின. அதனால், நல்லூரில் இடித்துக் குவிக்கப்பட்ட கற்களைப் பயன்படுத்தி, பண்ணையில் ஒரு கோட்டையைக் கட்டி முடிக்கப் பிலிப் தே ஒலி வேறா விரும்பினான்.


முஸ்லீம் வர்த்தகசாலைகள் அமைந்திருந்த இடம் கோட்டை அமைப்பதற்கான மையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. அந்திரே பூர்த்தாடு டி மென்டொன்சாவினால் இடித்துத் தரைமட்ட மாக்கப்பட்டுக் கொள்ளையிடப்பட்ட முஸ்லீம் பண்டகசாலைகள் இருந்த இடத்தில் யாழ்ப்பாணத்தின் கோட்டையைச் சட்டத் திட்டமிடப்பட்டது. அவ்விடத்தின் அமைவிடம் பலமான கோட்டையொன்றினை அமைப்பதற்கு மிக வாய்ப்பானதாகவிருந்தது.

போக்குவரத்துக்கு வாய்ப்பான கடனீரேரி, அருகிலிருந்த கொழும்புத்துறை, அலுப்பாந்தித்துறை, அகழிகளுக்கு நீர் தரக்கூடிய கடல், பகைவர்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு வழங்கக்கூடிய இடவமைப்பு என்பன ஒலிவேறாவுக்குத் திருப்தியைத் தந்தன. தமிழ்ச் சைவர்கள் வாழும் நல்லூர் நகரிலிருந்து விலகிப் பாதுகாப்பான அரண் ஒன்றினை அமைத்துக் கொள்வதுடன், கத்தோலிக்கர்கள் மட்டும் வாழ்கின்ற பறங்கித் தெரு (சீதாரி) என்ற புதியதொரு நகரினையும் உருவாக்க அவன் எண்ணம் கொண்டான். கோட்டை கட்டுவதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அதனைக் கட்டுவதற்கான கற்கள் அவ்விடத்தில் சேகரிக்கப்பட்டன. முதற் கட்டமாக நல்லூர் பெரிய கோயிலை இடித்ததால் குவிந்து கிடக்கும் கற்குவைகள் அவ்விடத்திற்குக் கொண்டு வரப்பட்டன. முருகைக் கற்கள், சுண்ணாம்புக் கற்கள், செங்கட்டிகள் என்பன பாரிய கூடார வண்டிகளில் முதலில் ஏற்றப்பட்டுப் பண்ணைக் கரையில் சேர்க்கப்பட்டன.

அவை காலதாமதத்தை ஏற்படுத்துகின்றது என்பதையுணர்ந்த ஒலிவேறா யாழ்பாண மக்களையும் தன படை வீரர்களையும் ந லூரிலிருந்து பண்ணை வரை மனிதர் சங்கிலியா வரிசையாக நிற்வைத்து கற்களை வேகமாகக் கரம் மாற்றி அனுப்பிப் பண்ணைக் கரையில் குவிப்பித்தான். அதே முறையில் யாழ்பாணத்தில் இடித்துத் தள்ளிப்பட்ட சைவ ஆலயங்களின் கற்களையும் பண்ணைக் கரையில் சேர்ப்பித்தான். (தொடரும்...)



# கவிதைக் கலசம்



## ஈசனே பதில் சொல்?

எது வழியென்று புரியவில்லை ஈசனே!
எது விடையென்று புரியவில்லை ஈசனே!
எது மொழியென்று புரியவில்லை ஈசனே!
எது நின் பாதமென்றும் புரியவில்லை ஈசனே!
தேவரை வதைத்த அசுரனுக்கு தக்க பாடம் கற்பிக்க
நெற்றிக் கண் திறந்து தீப்பொறியாய் திருப்பொய்கையில்
அறு திருமுருகனை அவதரித்து வேல் கொண்டு வதம் செய்ய
வழி செய்தாய் ஈசனே!
இப்போது ஏன் இந்த மௌனம்?
நின் பாதம் தொழவந்தோரை தா தா என இழுத்துச் சென்ற
காட்சியை கண்ணுற்றும்-நீ மௌனித்து இருப்பதேனோ?
மருத்துவ நாயகா! உனை நாடி வந்தோரை
விலங்கிட்டு மருத்துவம் பார்க்கும் நிலைகண்டும்
நீ நிலையாய் இருப்பதேனோ ஈசனே?
தமிழினம் என்றொரு இனமுண்டு தாரணியில் அதற்கொரு இடமுண்டு
இராணியர் இடமொன்று மடம்கட்ட
இசைத்தியோ ஈசனே பதில்  சொல்லு?

மாவை.நா.கஜேந்திரன்

## நின்றல்ல அன்றே அறு

அன்றொருநாள் சுதந்திர கானங்களை  ஊத்து இசைத்தபடி இக் கானகமெங்கும்
எம் கால்கள் நடந்தன. ஆதிசிவனைத் தரிசித்தோம் அவன் நிற்கும்
சோதி வடிவைக் கண்டு விகசித்தோம் விறகொடித்தோம் தேனெடுத்தோம்
பொங்கி மடைபாவிக் கூத்திட்டோம் தங்கி நின்று வனத்தில் இறை இரவில்
இன்னிசை சேர்த்திட்டோம் ஆனாலும் இன்று எங்களின்
எழிலார்ந்த வனத்தை எம்மிடமிருந்து பிடுங்கிக் கொள்ளுங்கள்
உங்கள் விசமூறிய விழிகளால் எங்களை விழுங்குங்கள்
எமது படையல்கள் மீது உமது பாதணிகளைப் படாவிடுங்கள்
குழந்தைகளைக் குறி அழவையுங்கள் அதனைக் குரூரமாக ரசியுங்கள்
இருளடைந்த ஆடைகளை அணிந்தபடி எங்களை அம்மணமாக்குங்கள்
குழந்தைகளுக்குக் கூடக் குடிதண்ணீர் அனுமதியாதீர்கள்
இருக்கும் நீரையும் மண்ணில் முழுமையாய் இறக்கிவிடுங்கள்
எம்மண்ணில் எங்களையே நுழையவிடாதீர்கள்
உன்னதங்களை உடைத்தெறியுங்கள்
ஏனெனில் புத்தனை நாங்களின்னும் மதிக்கிறோம்.

தி.சாந்தகுமார்

## மௌனத்தின் தேடல்-707



### சாட்சி சொல்லும்

பிள்ளைகள் விரும்பியதை
தேடிக் கொடுத்த அப்பன்
பெற்று பால் ஊட்டி உணவளித்து
வளர்த்த அம்மை
இன்று முதியோர் இல்லங்களில்
அன்பு பாசத்திற்காக ஏங்கி
நடைபிணமாக வாழ்வது தான் எங்கள்
பிள்ளைகளின் கரிசனைக்கு
சாட்சி சொல்லும் அடையாளங்கள்

பிரமன், கொக்குவில்.

### சுட்டிப்பையன்

தாத்தா நான்
விளையாடப் போறேன்
என்னுடன் நீயும்
விளையாட வா
அன்புடன் சொக்கிலேற்
நானும் தருவேன்-என
தோழர்த் தாத்தாவை
அழைக்கிறானோ
சுட்டிப் பேரன்

சி.மகாலட்சுமி,
கொக்குவில்.

### அன்பின் கதை

என் நிழலின் நிழலே!
நின் நிழலாவேனோ நானே!
கண்ணின் மணியே!
கண்ணிமையின் காவலனே!
என்னை நீ ஆக்கிய
நிதர்சனப் பேருவகையே!
தன்னந்தனியிடை தவித்த என்னை
தரிசித்த நீ என் தாயே!

ஜினோசியன்,
பலிசுட்டி.

### ஓடத்தான் வேண்டும்

வீடு வாசல் நிலம் என்றும்
வாகனம் நகை பணம் என்றும்
மனைவி பிள்ளை பேரன் என்றும்
தேடி ஓடிக் களைத்து விட்டேன்
இன்னும் ஓடத்தான் வேண்டும்
ஆனால் முதுமை என்னை
ஆட்கொண்டு விட்டது
னி ஓட வேண்டியது நீதான்.

பி.மதுஷ்சன், தையிட்டி.

### என்னிலை வரும்போது

கைவிரலைக் காட்டி
கண்ணசைவால் கட்டளையிட்டு
கன்னக்குழியில் புன்னகையை
பூக்கச் செய்த- என்
புது முகப் பூவே
நாளை என்னிலை வரும்போது
தன்னிலை மறந்து
இன்நிலை நினைத்து
தலையசைத்து ரசிப்பாய்.

ஆ.லக்ஷ்மி, வவுனியா.

### அன்பும் தென்பும்

அறிவும் அனுபவமும்
முதிர்ந்து வளர்ந்தாலும்
சில அபூர்வ சந்திப்புக்கள்
சிந்திக்க வைப்பது முண்டு
சுட்டு விரல் நீண்டமை
சுகத்தை வாரித் தந்தது
அன்பிற் கென்று முண்டு
தென்பை தரும் சக்தி
இது இருந்த வரையும் எழுந்து
விரைந்து நடக்க வைக்கும்.


க.நாகராசா, புணாவில்.

### தாத்தாவும் பாலகனும்

தாத்தாவிற்கு விளையாட்டுத் துப்பாக்கி காட்டி விரட்டும் பாலகனே
இன்று இது விளையாட்டாக இருக்கலாம்
வரும் காலத்தில் போர் வீரனாக வருவதா உன் கனவு
தாத்தா எத்தனை துப்பாக்கி தாங்கியவரோ
அவரது புன்னகையில் அர்த்தங்கள் தெரிகிறது  எடுக்கும் அயுதம்
இன்றல்ல உன் வாலிபப் பருவத்திற்கு உகந்தது
இப்போ போடுகிறாய்- புத்தகம் தூக்கு

அபி இலம்ாலிகா, சித்தன்கேணி.

## மௌனத்தின் தேடல்- 708



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தேன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல. 191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்



அதிக வெப்பம்.
தண்ணீர் பஞ்சம்
ஏற்படுமா வியாசரே?

**திகான் — வடமராட்சி**

**பழுதடைந்த உணவுகளை விற்பனை செய்யும் உணவக உரிமையாளர்களுக்கு உங்களின் உருக்கமான வேண்டுகோள் என்ன வியாசாரே?**

என் அன்பிற்கினிய வர்த்தகப் பெருமக்களே! எலிகள் வீட்டிற்குத் தொல்லை தருவன தான் ஆயினும் அவற்றை உணவைக் காட்டி பொறிக்குள் விளவைக்கும் கொடூரம் மிகப் பயங்கரமானது.

அப்பேற்பட்ட வேலையினையே தாங்கள் இப்போது மேற்கொண்டு வருகிறீர்கள். கெட்டுப்போன உணவு நஞ்செனின் அதை எப்படி மற்றவர்க்கு உண்பதற்கு வழங்குகிறீர்கள்? உண்பது உங்கள் குடும்ப உறுப்பினர்கள் என்று சிந்தித்து பாருங்கள். ஒரு நாளும் இப்படிப்பட்ட கீழ்த்தரமான வேலையைச் செய்யமாட்டீர்கள்.

இது எல்லா உணவக உரிமையாளர்களுக்கும் அல்ல. உணவு விடயத்தில் கண்ணும் கருத்துமாய் இருக்கும் பல உணவக உரிமையாளர்கள் எம் மண்ணில் இப்போதும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

**ரிதுஷ் — வடமராட்சி**

**அதிக வெப்பம். தண்ணீர் பஞ்சம் ஏற்படுமா வியாசரே?**

வடக்கு மாகாண கிணற்று நீரில் மலம் கலந்துள்ளது, தரமற்ற நீர் என்று கதை கட்டிய நீர் விற்பனை மாபியாக்கள் லீற்றர் 4ரூபா என சந்திக்கு சந்தி கடைகளை உருவாக்கி விட்டார்கள்.

பாவம் அவர்களும் மெசின் பூட்டி, ராங் வைத்து வடிந்த நீரை விலைக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

நீர்வளம் என்பது ஒரு தேசத்தின் சொத்து. அந்த வளம் அழிந்து போனால் அது அந்த தேசத்தை பாலைவனமாக்கி விடும். எல்லா வளமும் நிறைந்த எம் தேசத்தை நாமே பாலைவனமாக்கிவிடுவோம் போலிருக்கிறதே.

**டனுஷாந் ராசா — திருநெல்வேலி**

**சட்ட விரோத தையிட்டி விகாரைக்கு பாதுகாப்பு. தமிழர் பூர்வீக வெடுக்குநாறி சிவனுக்கு செல்ல தமிழினத்துக்கு மறுப்பு?**

தம்பி ராசா! இது பெரும்பான்மையின ஆட்சி அதிகாரங்களை உடைய சிங்கள பௌத்த நாடு. இங்கு அவர்கள் வைத்தது தான் சட்டம். இதை மீறினால் உங்களைக் குண்டுக் கட்டாகத் தூக்கிக் கொண்டுபோய் சிறையில் அடைந்து விடுவார்கள்.

இந்த உண்மைய் புரியாமல் மரத்தில் இருக்கும் மயிலிடம் மயிலே மயிலே இறகு போடு என்று கத்திக் குளறிக் கொண்டிருக்கிறீர்கள். முதலில் மயிலைக் கீழே இறக்கப் பாருங்கள். அதன் பின் இறகை எப்படி பெற்றுக் கொள்ளலாம் என்று மயிலிடம் கேட்டுக் கொண்டு நிற்காதீர்கள்.




**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**பிச்சுமணி — கரணவாய்**

**நான் இம்முறை கா.பொ.த. சாதாரண தரப்பரீட்சை எழுதுகிறேன். பரீட்சையை நினைக்கப் பயமாக இருக்கிறது வியாசரே?**


பரீட்சையை நினைத்துப் பயப்பிட்டால் நாமெல்லாம் பாலர் வகுப்பிற்கு மேலே படித்திருக்கவே முடியாது தம்பி.

பத்து வருடத்திற்கு முன் பார்த்த சினிமாப் படம் காட்சிக்குக் காட்சி அக்கு வேற - ஆணி வேறாய் நினைவில் இருக்கும் என்றால் ஏன் பாடம் அப்படி இல்லை?

எதையும் மனம் வைத்து விருப்புடன் செய்தால் அது எமது ஆள்மனதில் பதிந்து விடும்.

நாம் பரீட்சை எழுதும் போது அன்றைய தினம் ஆங்கில பாடம். அருகில் இருந்த நண்பன் மேசையில் தட்டி தட்டி எழுதும் தாள் வாங்கிக் கொண்டே இருந்தான். எமக்கு பெரும் வியப்பு.

வெளியில் வந்தவனிடம் ஆவலாய் வினவினோம். பரீட்சை எழுதியபின் கிடைத்த நேரத்தில் ஐந்து கவிதைகளை எழுதி முடித்துவிட்டேன் என்றான் சிரித்தபடி.



வெடுக்குநாறி பொலிஸாரின் அடாவடியை என்னவென்று கூறிவிட முடியும் வியாசரே?

**மகாலட்சுமி — கொக்குவில்**

**கைத் தொலைபேசிப் பாவானை அற்றுப் போனால் உலக இயக்கமே நின்று போய்விடுமா வியாசரே?**

இற்றைக்கு முப்பது வருடங்களுக்கு முன் இந்த கைத் தொலைபேசி நவீனம் எனும் கொடிய அரக்கர்கள் இருந்திருக்கவில்லை. அப்போது வாழ்ந்த மனிதன் ஆரோக்கியத்துடன் நிம்மதியாகவும் வாழ்ந்தான். குடும்பமாய் முற்றத்து நிலாவெளிச்சத்தில் நிலாச்சோறு உண்டு மகிழ்ந்தது முதல் அயல் வீட்டார் அரட்டை வரை சந்தோசத்தின் உச்சத்தில் இருந்த மனிதனிடம் தொற்றிக் கொண்ட தொலைபேசி அனைத்தையும் செயலிழக்கச் செய்து, மனிதனை தன் அடிமையாக்கி விட்டது.

முன்பு மழைவந்தால் தலையை கையால் மறைத்தபடி மறைவிடம் தேடிய மனிதன் இப்போது சட்டைப் பையில் இருக்கும் தொலைபேசியை நனையாதபடி அணைத்துக் கொண்டு மறைவிடம் தேடுகிறான். இது ஒன்றே நவீனத்தின் மாற்றம்.

**சுதன் — குப்பிளான்**

**இலங்கையை நாருரிப்பதற்கு வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் சான்று போதுமா?**

இந்த நாட்டில் பௌத்தம் மட்டுமே மதம் என்ற கோட்பாடு இருக்கும் வரை வேறு எதையும் செய்துவிட முடியாது.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் தமிழர்களின் பூர்வீகத்துக்குரியவர்.

அதை தட்டிப்பறிக்க எவர் முற்பாட்டாலும் அதை தமிழினம் பார்த்துக் கொண்டு இருக்காது என்பதை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும.

ஒரு இனத்தின் பூர்வீகத்தை சுவீகரித்து இன்னொரு இனத்தின் பூர்வீகமாய் காட்டுவதற் குள் இருக்கும் வன்மத்தனத்தை முதலில் பொரும்பான்மை அரசியல் வாதி கள் நிறுத்திக் கொள்ள வேண்டும். இது தமிழினத்தின் தாழ்மையான வேண்டு கோள்.

**விஜயதரன் — உரும்பிராய்**

**வெடுக்குநாறி பொலிஸாரின் அடாவடியை என்னவென்று கூறிவிட முடியும் வியாசரே?**

நீதிமன்ற அனுமதியுடன் வழிபாடுகளை மேற்கொள்ளச் சென்றவர்களைக் கைது செய்தீர்கள். பரவாயில்லை ஆனால் அதற் கான காரணத்தைக் கூற வேண்டியது சம்பந்தப்பட்டவர்களின் கடமை. அது நடக்கவில்லை.

வெடுக்குநாறி ஆதிசிவன் பூசகர் உட்பட கைது செய்யப்பட்டவர்கள் கைவிலங்குடன் வைத்தியசாலையில் மருத்துவம் பெறுவது எப்பேற்பட்ட கெடூரம்?

கொலைக்குற்றவாளிகளைப் போல அவர்களை நடத்துவது ஒரு நாளும் ஏற்புடையதல்ல. இதற்கு இலங்கை அரசு ஒரு முடிவைத் தர வேண்டும். அப்போது தான் இன-மத நல்லிணக்கத்திற்கு பங்கம் ஏற்பாடாது.

# சுகமான விடியல்

391

## மாரடைப்பை தடுக்க... மற்றும் மாரடைப்பை ஏற்படுத்தும் கல்சியம் படிவை தடுக்க....

மாரடைப்பை தடுக்க என்ன செய்யலாம்... இந்த அடைப்பை இயற்கையான வழி முறைகள் மூலம் தவிர்த்து கொள்ளலாமா அல்லது குறைத்து கொள்ள லாமா.... இந்த Bypass surgery, Angioplasty அல்லது stent போடுகின்ற சிகிச்சைகள் உண்மையிலேயே தேவை தானா.... தற்போது மாரடைப்பு சம்பந்தமான ஆய்வுகள் உண்மையிலேயே என்ன விபரங்களை சொல்கின்றன...இவற்றின் பாதிப்புக்களை குறைப்பதற்கு உண்மையில் என்னதான் செய்யவேண்டும்... போன்ற விடயங்களை இங்கு சுருக்கமாக பார்ப்போம்.

இருதயத்திற்கு குருதியை வழங்குகின்ற குழாய்களில் Atheromatous plaque எனும் அடைப்பு இருக்குமானால் அவர்களுக்கு மாரடைப்பு ஏற்படும் வீதம் அதிகமாக இருக்கும். மாரடைப்பு ஏற்படுவதை தடுக்க பல்வேறு வகையான நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகிறோம். இயற்கையான வழிமுறைகள், உணவு முறையில் மாற்றங்கள், உடற் பயிற்சி, Aspirin என்ற மாத்திரை, Bypass surgery, Angioplasty அல்லது stent போடுவது போன்றவை மற்றும் statin என்ற மாத்திரைகளின் பாவனை.... இவ்வாறு பல நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகிறோம். அத்துடன் இந்த படிவிலே கல்சியத்தின் செறிவு அதிகமாக இருக்குமானால் அதனுடைய மேற்பரப்பு கரடு முரடாகி, அந்த மேற்பரப்பில் இரத்த கலங்கள் படும்போது அவை உடைந்து இரத்தக் கட்டிகள் ஏற்பட்டு, அது மாரடைப்பில் முடிகிறது. எனவே இந்த அடைப்பில் கல்சியத்தின் வீதம் அதிகமாக இருக்குமானால் அவர்களுக்கு மாரடைப்பு ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாக இருக்கும். எனவே இந்த படிவில் உள்ள கல்சியத்தை கரைப்பதற்கு அல்லது கல்சியத்தை குறைப்பதற்கு EDTA போன்ற Chelating agents ஐ கொடுப்பதன் மூலம் மாரடைப்பு ஏற்படும் வீதத்தை வெகுவாக குறைத்துக் கொள்ள முடியும் என ஆய்வுகள் உறுதி செய்துள்ளன.

ஒரு விடயத்தில் நாம் கவனமாக இருக்க வேண்டும். அநாவசியமாக நாம் கல்சியம் மாத்திரைகளை எடுப்போமேயானால் அந்த அடைப்பில் கல்சியத்தின் வீதம் அதிகமாகும். இது மாரடைப்பு ஏற்படும் வீதத்தை அதிகரிக்கிறது. குறிப்பாக விற்றமின் D சேர்க்கப்படாத இந்த கல்சியம் மாத்திரைகளை அநாவசியமாக பாவிப்பதை நாம் நிறுத்திக்கொள்ள வேண்டும். வைத்தியர்கள் பரிந்துரைத்தால் மட்டும் அந்த காலப்பகுதிக்கு மட்டும் இந்த மாத்திரைகளை பாவிக்க முடியும். தொடர்ந்து நீண்ட காலமாக இந்த கல்சியம் மாத்திரைகளைப் பாவிப்பது பாதுகாப்பானதல்ல. மருந்துகள் மூலமாகவோ அல்லது இயற்கை முறைகளின் மூலமாகவோ இரத்த குழாய்களில் படிந்துள்ள இந்த Atheromatousplaque என்ற படிவை நாம் முற்றாக கரைத்து நீக்குவது என்பது நடைமுறையில் சாத்தியமில்லை.



அவ்வாறு கரைப்பது சம்பந்தமாக பல பிழையான வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. அவை உண்மைக்கு புறம்பானவை. ஆனால் சில மருந்துகளின் மூலம் அந்த படிவுகளின் தன்மையில் மாற்றங்களை ஏற்படுத்தி மாரடைப்பு ஏற்படும் வீதத்தை குறைத்துக்கொள்ள முடியும்.

அத்துடன் எமது வாழ்க்கை முறையில் ஆரோக்கியமான நடவடிக்கைகளை கடைப்பிடிப்பதன் மூலம் இந்தப் படிவு ஏற்படுவதை தவிர்த்துக் கொள்ளலாம். அல்லது வெகுவாக குறைத்துக் கொள்ளலாம். இதனால், அநாவசியமாக Bypass surgery, Angioplasty அல்லது stent போன்ற சிகிச்சை முறைகள் செய்வதன் சந்தர்ப்பங்களை குறைத்துக் கொள்ள முடியும். இதுவே, புத்திசாலித்தனமான முறை ஆகும். Atheromatous plaque என்ற படிவு உள்ளவர்களில் மாரடைப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தை குறைப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்பது சம்பந்தமாக பல ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆய்வுகள் என்ன சொல்கின்றன என பார்த்தால் 40 பேருக்கு Aspirin மாத்திரைகளை கொடுப்பதால் ஒரு மாரடைப்பை தடுக்க முடியும். அதே போல் 25 பேருக்கு Bypass surgery செய்வதன் மூலம் ஒரு மாரடைப்பை தடுக்க முடியும்.

ஆனால் இயற்கையான சில நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் உதாரணமாக அவர்களது உணவு முறையில் மாற்றங்களை ஏற்படுத்துவது நிறைபராமரிப்பில் கவனம் எடுப்பது போன்ற நடவடிக்கைகளை நாம் 18 பேரில் அறிமுகப்படுத்தினால் ஒரு மாரடைப்பை தடுக்க முடியும்.

அதாவது, இயற்கையான நடவடிக்கைகள் மூலம் மாரடைப்பை தவிர்க்கும் வீதமானது Aspirin மாத்திரைகளை பாவிப்பதை விட மற்றும் Bypass surgery செய்வதை விட அதிகமாகும். இந்த இலக்க முறை NTT (Number needed to treat) என சொல்லப்படுகிறது. எனவே, நாம் எமது உணவு முறை மற்றும் உடல் நிறை பராமரிப்பு போன்றவற்றில் கூடுதல் கவனம் எடுக்க வேண்டும்.

தற்போது மருத்துவ உலகிற்கு ஒரு நல்ல தகவல் கிடைத்துள்ளது. அதாவது, மாரடைப்பை ஏற்படுத்தும் கொலஸ்திரோல் படிவில் உள்ள கல்சியத்தை கரைப்பதற்கு EDTA போன்ற Chelating agents I 18 பேருக்கு கொடுப்பதால் ஒரு மாரடைப்பை தடுக்க முடியும். அமெரிக்காவில் நடத்தப்பட்ட Track trial என்ற ஆய்வில் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை மேலும் உறுதிப்படுத்த Track 2 trial எனும் ஆய்வு தற்போது நடத்தப் பட்டு வருகிறது. இதை விட புகைப்பவர்களில் மாரடைப்பு ஏற்படும் வீதம் 2 அல்லது 3 மடங்கு அதிகமாகும். எனவே, இதனை தவிர்ப்பது நல்லது. அத்துடன் ஆண்கள் தமது இடுப்பு சுற்றளவை 90 cm அதாவது 40 inch இற்கு குறைவாக பேணுவதன் மூலமும் பெண்கள் தமது இடுப்பு சுற்றளவை 80 cm அதாவது 35 inch இற்கு குறைவாக பேணுவதன் மூலமும் மாரடைப்பை தடுக்கலாம்.

அத்துடன் ஒழுங்கான நித்திரையும் உடற்பயிற்சியும் அவசியம். இதுவும் மாரடைப்பை குறைக்க உதவியாக இருக்கும். வளர்ந்தவர்களில் 7 மணி நேர நித்திரை அவசியம். இதற்கு மேலதிகமாக குருதி அமுக்கத்தை 130/80 என்ற வரை யறைக்குள் பேணுவது, நீரிழிவு நோயை பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்வது போன்றவற்றின் மூலமாகவும் மாரடைப்பு ஏற்படும் வீதத்தை வெகுவாக குறைத்துக்கொள்ள முடியும். எனவே, மாரடைப்பை வெற்றி கொள்ள ஓரிரண்டு நடவடிக்கைகளில் மட்டும் கவனம் செலுத்தாமல் இங்கு குறிப்பிடப்பட்ட பல்வேறு விடயங்களில் கவனம் செலுத்தினால் மாரடைப்பு ஏற்படும் சந்தர்ப்பத்தை குறைத்துக் கொள்வது அவ்வளவு கடினமாக இருக்காது.

Dr. சி. சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்.

# உணவு தவிர்ப்பு போராட்டம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

(வவுனியா)

வவுனியா சிறைச்சாலையில் தமது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்த கைதிகள் 5 பேரின் போராட்டம் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது

வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி தினத்தன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் 5 பேர் கடந்த 5 நாட்களாக உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத்தன்று வழிபாட்டில் ஈடுபட்டிருந்த போது ஆலய பூசகர் உள்ளிட்ட எட்டு பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் தற்போது வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் தம்மை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி 5 பேர் கடந்த ஐந்து நாட்களாக சிறைக்குள் உண்ணாவிரத போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இவர்களின் விடுதலையை வலியுறுத்தி வடக்கு-கிழக்கில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில் நேற்று மதியம் வவுனியா சிறைச்சாலைக்கு சென்ற மத குருக்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியதுடன் அவர்களின் விடுதலைக்கு தாங்கள் பொறுப்பு என குறித்த குழுவினர் வழங்கிய வாக்குறுதியினையடுத்து அவர்கள் உண்ணாவிரத போராட்டத்தை இடைநிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# சஜித்-சந்திரிகா சந்திப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்திப்பில் இருவருக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடல் தொடர்பில் தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

# நிர்வாக திறனற்றவர் கோட்டா மகிந்த முன் விமர்சித்த தேரர்

(கொழும்பு)

மிகப்பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ நாட்டிற்கும் மக்களிற்கும் துரோகமிழைத்தார் என முருதொட்டுவே ஆனந்ததேரர் ராஜபக்ஷ முன்னிலையில் தெரிவித்தார்.

கோட்டபயவிடம் நிர்வாகத் திறமையிருக்கவில்லை தனக்கு யாரால் நன்மை கிடைக்கும் என கருதினாரோ அவர்களையே தன்னைச் சுற்றி வைத்திருந்தார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் தவறான பாதையில் செல்கின்றார் என நாங்கள் பல தடவை அவரிடம் தெரிவித்தோம் அதன் காரணமாகவே அவர் வீழ்ச்சியடைந்தார் நாங்கள் இன்று எதிர்கொள்ளும் நிலைமைக்கு அவரின் நிர்வாகத்திறன் இன்மையே காரணம் என சுட்டிக்காட்டினார். (நி)

# எதிர்வரும் தேர்தல்களில் வெற்றி வாகை சூடுவோம்

## மகிந்த சூளுரை



(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல்களில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நிச்சயம் வெற்றி பெறும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சூளுரைத்துள்ளார்.

இந்த வருட இறுதிக்குள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்பட்டுவரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்ற தேர்தல்களை வெற்றிகரமாக முகங்கொடுக்க பிரதான கட்சிகள் தற்போது தயாராகி வருகின்றன.

அந்தவகையில் ஐக்கிய தேசிய கட்சி மற்றும் தேசிய மக்கள் சக்தியினர் தமது தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள நிலையில் பொதுஜன பெரமுனவும் தற்போது தமது தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகின்றது.

இந்நிலையில் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நிச்சயம் வெற்றிபெறும் என மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதேவேளை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பொதுஜனபெரமுன சார்பில் களமிறங்கவுள்ள ஜனாதிபதி வேட்பாளர் இன்னும் பெயரிடப்பட வில்லை எனவும் தெரிவித்துள்ளார். (நி)

# இன்று ஒரு தகவல் 67



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## சொந்த சிந்தனை

அவன் ஆயிரம் சொல்லுவான் உன் புத்தி எங்கு போய்விட்டது? என்று யாராவது திட்டியிருக்கிறார்களா? மற்றவர்கள் அப்படி சொல்லுகிற அளவுக்கு நீங்கள் எப்போதாவது செயற்பட்டு இருக்கிறீர்களா? அப்படி என்றால் இதை கொஞ்சம் கேளுங்கள்.ஒரு ஊரிலே ஒருவன் புதிதாக ஒரு மீன் கடை ஆரம்பித்தான். புதிதாக கடை ஆரம்பித்து இருக்கிறான் என்று எல்லோருக்கும் தெரிய வேண்டும்அல்லவா? அதற்காக என்ன செய்யலாம் என்று யோசித்தான்.உடனே ஒரு விளம்பரப் பலகை ஒன்று தயார் செய்தான். அதிலே அழகான ஒரு மீன் படத்தை வரைந்தான். அதற்கு கீழே நல்ல மீன் இங்கே விற்கப்படும் என்று எழுதி விளம்பரப் பலகையை கடைவாசலிலே வைத்துவிட்டான்.

அதற்குப்பிறகு என்ன நடந்தது தெரியுமா? அவன் சிநேகிதன் ஒருவன் அந்தப் பக்கமாக வந்தான். இந்த விளம்பரப் பலகையைப் பார்த்தான். பிறகு கடைக்காரனைப் பார்த்து, ஏன் நீ வேறு எங்கேயாவது கடை வைத்திருக்கிறாயா? என்று கேட்டான். இல்லையே என்றான் கடைக்காரன். அப்படி என்றால் தேவையில்லாமல் எதற்கு இந்த விளம்பரப்பலகையிலே "இங்கே" என்னும் ஒரு வார்த்தையை சேர்த்திருக்கின்றாய் அதனை அழித்து விடு என்றான். கடைக்காரன் பார்த்தான் அவன் சொன்னதும் நியாயமாகத்தான் தோன்றியது. உடனே அந்த வார்த்தையை அழித்துவிட்டான். இப்போது படித்துப் பார்த்தான் மீன் படம், அதற்குக் கீழே "நல்ல மீன் விற்கப்படும்" என்று இருந்தது.

அடுத்தபடியாக இன்னொருத்தன் வந்தான். விளம்பரப் பலகையைப் பார்த்தான். பிறகு கடைக்காரனைப் பார்த்த ஏன்... நீ கெட்டுப்போன மீனையும் விற்பனை செய்கிறது உண்டா? என்று கேட்டான். இல்லையே என்றான் கடைக்காரன்.பிறகு எதற்காக "நல்ல" என்ற ஒரு வார்த்தை அதிலே! அழித்துவிடு என்றான். அதுவும் சரியாகத்தான் தோன்றியது. அழித்துவிட்டான். இப்போது அந்த விளம்பரப் பலகையிலே அதற்குக் கீழே மீன் விற்கப்படும் அவ்வளவு தான்.

இன்னொருத்தன் வந்தான். விளம்பரப் பலகையைப் பார்த்தான். அப்புறம் நிமிர்ந்து கடைக்காரனைப் பார்த்து ஏன்... அது தான் மீன் என்று எழுதியிருக்கிறதே! அப்புறம் எதற்காக அந்த மீன் படம் அதற்கு மேலே வேண்டாமே! என்றான். அதுவும் சரி தானே என்று நினைத்தான் கடைக்காரன். உடனே மீன் படத்தையும் அழித்தான். இப்போது விளம்பரப் பலகையிலே இருந்தது மீன் விற்கப்படும் அவ்வளவு தான்.

அதோட விட்டுதா? அடுத்ததாக ஒருவன் வந்தான். என்னப்பா மீனை யாருக்காவது இலவசமாக கொடுத்துக்கொண்டு இருக்கின்றாயா? என்றான் இல்லையே! என்றான். பிறகு எதற்காக "விற்கப்படும்" என்று ஒரு வார்த்தை அதிலே என்றான். சரி என்று இவன் அதையும் அழித்துவிட்டான்.இப்போது அந்தப் பலகையிலே மீன் என்கின்ற ஒரே ஒரு வார்த்தை தான் இருந்தது.

அடுத்ததாக ஒருத்தன் வந்தான் ஏன்? அது தான் தூரத்திலே வரும்போதே மீனோட வாசனை முக்கைத் துளைக்குதே! அது போதாதா? "மீன்" என்று விளம்பரப் பலகையிலே எழுதி வேறு வைக்க வேண்டுமா? என்றான். கடைக்காரன் அதையும் அழித்துவிட்டு இப்போது வெறும் பலகையை வைத்துக்கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்தான்.

இப்போது இன்னொருத்தன் வந்தான். ஏன்.. என்ன இப்படி கடைக்கு முன்னாடி வெறும் பலகையை வைத்துக்கொண்டு உட்கார்ந்து இருக்கிறாய் இதிலே அழகாக ஒரு மீன் படம் வரைந்து அதுக்குக் கீழே நல்ல மீன் இங்கே விற்கப்படும் என்று எழுதி வைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? என்றான். அந்த கடைக்காரனுக்கு இதுவும் ஒரு நல்ல யோசனையாகத்தான் தோன்றியது.இப்படிப்பட்ட ஆசாமிகளுக்கு விளம்பரப் பலகையை அழித்து எழுதிக்கொண்டு இருக்கத்தான் நேரம் சரியாக இருக்கும். வியாபாரத்தை கவனிப்பதற்கு நேரம் இருக்காது. அடுத்தவர்கள் சொல்லுதை கேட்கவே கூடாது என்று நான் சொல்லவரவில்லை.கேட்டு அதன்படி நடந்து கொள்வதற்கு முன்னாடி கொஞ்சம் சொந்தமாகவும் சிந்திக்க வேண்டும் அல்லவா?

எண்ணித் துணிக கருமம்! என்று தான் திருவள்ளுவர் சொன்னார். கேட்டுத் துணிக கருமம் என்று சொல்லவில்லையே. இப்போது நெருப்பைத் தொட்டுக் கையை சுட்டுக்கொள்கின்றீர்கள். ஏன் இப்படி சுட்டுக் கொண்டீர்கள் என்று கேட்டால் அடுத்த வீட்டுக்காரன் தான் சொன்னான் நெருப்பை தொட்டுப்பார்க்க சொல்லி அது தான் தொட்டுப் பார்த்தேன் என்றா சொல்லுவீர்கள். இப்ப மருந்து பேடுவதற்கு அடுத்த வீட்டுக்காரனா வருவான்.

ஒருவர் சிறியதாக வீடு ஒன்றைக் கட்ட ஆரம்பித்தார். கூரை வீடு போதும் என்று நினைத்தான் . ஒருதர் சொன்னார்.வீடு கட்டுறது கட்டுறதுதானே அஸ்திவாரத்தைப் பலமாக போடு.. என்றார். இவரும் பலமாகப் போட்டார். இன்னொருத்தர் சொன்னார் அஸ்திபாரம் பலமாகப் போட்டால் அதற்கு மேல் மண் சுவரை கட்டி எழுப்புற செங்கல் சுவராக கட்டி எழுப்பு என்றார். செங்கல் வைத்து சுவர் எழுப்பியதற்கு பிறகு பூசாமல் இருந்தால் நல்லா இருக்காது. சீமெந்து வாங்கி பூசி விடு என்றார் இன்னொருத்தர். இவ்வளவு தூரம் ஆகிவிட்டது இதற்கு மேல் கூரை போடாவிட்டால் நன்றாக இருக்காது. ஓட்டு வீடாகவே ஆக்கி விடுவது தான் நல்லது என்றார் இன்னொருத்தர். எல்லோரும் சொல்வது இவருக்கு நியாயமாகவே பட்டது. அப்படியே செய்தார் . கொஞ்ச நாள் கழித்து ஒரு கடைத்தெருவிலே அந்த ஆள் நின்று கொண்டு இருந்தார். இப்ப எந்த மட்டத்தில் வீடு இருக்கிறது என்று கேட்டார் இன்னொருத்தர். தலைக்கு மேல் போய் விட்டது என்றார் வீட்டைக் கட்டியவர். எது வீடா என்று கேட்டார்? இல்லை கடன் தான் என்று சொன்னார். சொந்தச் சிந்தனை இல்லை என்றால் இப்படித்தான்.


# எமது நிலம், எமது கடல் என சண்டையிட்டோம்

# இன்று எமது வளங்கள் வேற்று நாட்டினரிடம்

## கிளிநொச்சியில் அநுர

(முறிகண்டி)

**வடக்கு கடல் எல்லை இந்தியாவிடம் மன்னார் வளம் அதானி குடும்பத்தின் வசம் எனவும், பூநகரிகுளம் அவுஸ்திரேலிய நிறுவனம் வசம் சென்றுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**



நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணியின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் இதுவரை காலமும் பரம்பரை அரசியலே நடைபெற்றுள்ளது. அதற்கான முனைப்புக்களே தற்போதும் இடம்பெறுகின்றது.

பரம்பரை ஆட்சிகளால் நாங்களும், எமது நாடும் அனுபவித்த துன்பங்கள் போதும். இனியும் அதற்கு அனுமதிக்கக்கூடாது. இந்த பரம்பரை ஆட்சியாளர்களால் நாட்டில் யுத்தம் மட்டுமே நடந்தேறியது.

உங்களது பிள்ளைகள் காணாமல் ஆக்கப்பட்டார்கள். பல்வேறு இழப்புக்களை சந்தித்தீர்கள். ஆனால் இந்த யுத்தத்தினாலும் இழப்புக்களைத் தவிர வேறு ஒன்றும் நடக்கவில்லை

தெற்கிலும் வடக்கிலும் இனவாதம் பேசுகின்றனர். அந்த இனவாதத்தின் ஊடாகவே அரசியல் செய்ய முனைகின்றார்க்ள. ஆனால் மக்களிடம் இனவாதம் இல்லை.

எமது வரலாற்றை எடுத்துக் கொண்டால் நாங்கள் திருமணம், சமய வழிபாடுகள், கலாசாரம் உள்ளிட்டவற்றில் ஒருவருக்கொருவர் புரிந்துணர்வுடன் செயற்பட்டோம். நாங்கள் ஒன்றாகவே வாழ்ந்தோம். எமக்குள் இனவாதம், வேறுபாடுகள் இருந்திருக்கவில்லை. கடந்த காலத்தில் பிரிவினை அரசியலே மேற்கொள்ளப்பட்டது.

தெற்கிலும் வடக்கிலும் அவ்வாறு பிரிவினை பேச்சுக்களை முன்னெடுத்தே அரசியல் செய்யப்பட்டது. அந்த அரசியல் நிலையிலிருந்து மாற்றத்தை உருவாக்க வேண்டும்.

இந்தியாவை நாங்கள் பார்க்க வேண்டும். இந்திய தேசிய கொடியின் கீழ் அனைத்து மக்களும் ஒன்றாக வாழ்கிறார்கள். இந்தியாவில் பல்வேறு மொழி பேசும் பல்வேறு இனங்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். அங்கு பல்வேறு வகையான கலை, கலாசாரம் எனஇருந்தாலும் அவர்கள் இந்தியர்களாக ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். அந்த ஒற்றுமையினால் அப்துஸ்கலாம் எனும் ஒருவரை ஜனாதிபதியாக கொண்டுவர முடிந்தது.

அனைவரும் ஒன்றாகி அனைத்து மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தேசிய அரசாங்கம் ஒன்றை உருவாக்க வேண்டும். இனிவரும் காலங்களில் பிரிவினை அரசாங்கம் எமக்கு வேண்டாம். தென்னிலங்கை மக்களுடன் இணைந்து வடக்கு, கிழக்கு மக்களும் இணைந்து அமைக்கின்ற அரசாங்கமே எமக்கு வேண்டும்.

நாங்கள் கிளிநொச்சிக்கு வந்தது அரசியல் வியாபாரத்திற்கு அல்ல. 13 இற்கு மேல் தருவோம் திருத்தம் செய்வோம். சமஸ்டி தருவதாக கூறி வியாபாரம் செய்ய நாங்கள் இன்று வரவில்லை. வாக்கு போடுங்கள் நாங்கள் இதைச் செய்வோம் என்று சொல்வதற்கு இது கொடுக்கல் வாங்கல் அரசியல் இல்லை. அவ்வாறான கடந்த கால அரசியல் போன்று நாங்கள் செயற்படப்போவதில்லை. ஒன்றிணைந்த அரசாங்கத்தின் மூலம் நிரந்தரமான தீர்வை முன்வைப்போம் என்பதை கூறவே நாங்கள் இங்கு வந்தோம்.

அத்துடன் வடக்கு கடல் மீன்கள் இந்திய மீனவர்களால் சூரையாடப்படுகின்றது. இதற்கு முன்னர் வடக்கு கடல் எல்லை தமிழர்களுடையதா அல்லது சிங்களவர்களுடையதா என போராட்டம் நடைபெற்றது. ஆனால் இன்று அக்கடல் இந்தியாவிடம் உள்ளது.

மன்னாரில் காற்றாலை மின்னுற்பத்தி எமது வளம். அது எமக்கேயான வளம். அந்த இடத்தில் நிலம் யாருக்கென உள்நாட்டு சண்டை இடம்பெற்றது. அந்த செல்வம் யாருடையது? இந்தியாவின் அதானி குடும்பத்தினருக்கானதாக மாறியுள்ளது.


அதேபோன்று, கிளிநொச்சி - பூநகரிக்குளதில் மாபெரும் சூரிய ஒளி மின்னுற்பத்தி நிலையம் உருவாக்கப்படவுள்ளது. அந்த இடத்திலிருந்து ஒரு யுனிட் மின்சாரத்தை 52 ரூபாவுக்கு பெற்றுக் கொள்ளும் வகையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய கம்பனி ஒன்றின் வசமாகிறது அப்பிரதேசம். எமது கடல், நிலம் என ஒருவருக்கொருவர் சண்டையிட்டோம். இன்று எமது வளங்களை வேறு நாடுகளும், கம்பனிகளும் தமதாக்குகின்றார்கள்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற விமானப்படை கண்காட்சிக்கு பலரும் உலங்கு வானூர்தியில் சென்றார்கள். அது முறைகேடு இல்லையா? மக்கள் உணவின்றியும், மருத்துவ வசதி இன்றியும் வாழுகின்ற நிலையில், இவ்வாறு அவர்கள் பணத்தை வீணாக செலவு செய்கின்றனர்.

விவசாயம் உள்ளிட்ட பிரச்சினைகளிற்கு தீர்வு காணப்படும், இங்குள்ள நிலங்களில் விவசாயம் மேம்படுத்துவது எமது திட்டமாக உள்ளது. நாங்கள் ஆட்சியை பொறுப்பெடுத்த குறுகிய காலத்தில் தீர்வுக்கான பாதைகள் திறக்கப்படும். இந்த ஆட்சி மாற்றம் என்பது அரசியல் மாற்றமான முடிவாகாது. இந்த நாட்டை கட்டியெழுப்பும் ஆரம்பம் எனவும் அவர் இதன்போது தெரிவித்தார். -(நி-100)

# நடிகர் அமிதாப்பச்சன் வைத்தியசாலையில்



(டில்லி)

இந்திய திரையுலகின் பிரபல நடிகர் அமிதாப்பச்சன் உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அமிதாப்பச்சனுக்கு இதயத்தில் ஆஞ்சியோ பிளாஸ்டி அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் மும்பையில் உள்ள கோகிலாபென் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி)

# மனிதாபிமான பொருட்களுடன் காசாவை சென்றடைந்தது கப்பல்

(காசா)

காசாவின் கடற்பகுதிக்கு சென்றுள்ள முதலாவது மனிதாபிமான கப்பல்மனிதாபிமான பொருட்களை தரையிறக்கியுள்ளது.

ஸ்பெயினை சேர்ந்த ஓபன் ஆர்ம்ஸ் என்ற கப்பலே காசாவின் கரையோரப்பகுதிக்கு சென்றுள்ளது.

பட்டினியின் பிடியில் காசா சிக்குண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ள நிலையில் சைப்பிரசிலிருந்து இந்த கப்பல் 200 தொன் மனிதாபிமான பொருட்களுடன் கடந்த செவ்வாய்க்கிழமை புறப்பட்டுள்ளது.

தற்காலிகமாக உருவாக்கப்பட்ட ஜெட்களை பயன்படுத்தி பாரம் தூக்கிமூலம் பொருட்கள் இறக்கப்பட்டு பாரவூர்திகளில் ஏற்றப்படுவதை காண்பிக்கும் படங்கள் வெளியாகியுள்ளன.

காசாவிற்குள் தரை மார்க்கமாகவும் ஆகாயமார்க்கமாகவும் மனிதாபிமான பொருட்களை விநியோகிப்பது கடினமானதாக காணப்படுகின்ற நிலையில் இந்த முயற்சி இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உலகின் மிகப்பெரிய புளூபெர்ரி பழம்

(கன்பெரா)

அவுஸ்திரேலியாவிலுள்ள பண்ணை ஒன்றில் விளை யும் புளூபெர்ரி பழம் உலகி லேயே அதிக நிறை கொண் டதாக கின்னஸ் சாதனை படைத்துள்ளது.

நவம்பரில் எடுக்கப்பட்டு உறைவிப்பான் பெட்டியில் பதுக்கி வைக்கப்பட்டது,

கிட்டத்தட்ட 4 செ.மீ அகலமும் 20.4 கிராம் எடையும் கொண்டது. இது சராசரி புளூபெர்ரியை விட 10 மடங்கு. மேற்கு ஆஸ்திரேலியா வில் வளர்க்கப்படும் 16.2 கிராம் பெர்ரி இந்த பட்டத்தை முன்பு வைத்திருந்தது.

"உண்மையில் நாங்கள் அவற்றை அளவிடும் வரை நாங்கள் கண்டுபிடித்ததை உணர்ந்தோம்," 12 வாரங்களுக்குப் பிறகு இந்த வாரம் கின்னஸ் உலக சாதனையில் இதுவரை ஆவணப்படுத்தப்பட்ட புளூபெர்ரி பழங்களில் அதிக எடை கொண்ட புளூபெர்ரி பழமாக சான்றளிக்கப்பட்டது என்று முன்னணி தோட்டக்கலை நிபுணர் தெரிவித்தார். (நி)

# கொடிய விஷப்பாம்புகளின் தீவு பிரேசிலில் உள்ளது

(பிரேசில்)

உலகிலேயே மிகக் கொடிய விஷப்பாம்புகள் மாத்திரம் வாழும் தீவு பிரேசில் நாட்டில் உள்ளது. இந்த தீவில் சுமார் 4 ஆயிரத்துக்கும் அதிகமான பாம்புகள் உள்ளன.

பாம்புகளின் தீவு என அழைக்கப்படும் இந்த இடத்திற்கு இல்காடா குயீமடா கிராண்டு என பெயரிடப்பட்டுள்ளது.

இந்த பாம்புத் தீவில் ஒரு சதுர கிலோமீற்றருக்கு ஒரு பாம்பு எனும் வீதத்தில் கொடிய நச்சுத் தன்மை வாய்ந்த பாம்புகள் அதிகம் வாழ்கின்றன.

இது பிரேசிலின் சாவோ பாவுலோ மாநிலத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ளது.

பல்வேறு காலநிலை களை கொண்ட இத்தீவில் பாறைகள் சூழ்ந்த மழைக் காடுகள் காணப்படுகின்றன.

அதிக பாறைகள் கொண்ட நிலப்பரப்பாகவும், வெப்ப மண்டல பகுதியாகவும் இருப்பதால் இந்த தீவில் மனிதனோ அல்லது வேறு பாலூட்டிகளோ வாழ முடியாத நிலை உள்ளது.

இதனால் தன்னை வேட்டையாடவோ கொல்லவோ எந்த உயிரினமும் இல்லாத காரணத்தால் பாம்புகள் தங்கள் இனத்தை அந்த தீவில் பெருக்கி அதை தமக்கான தீவாக மாற்றியுள்ளன. மனிதர்கள் வாழத் தகுதியற்ற இத்தீவில் சில ஆராய்ச்சியாளர்களும் பிரேசில் இராணுவமும் மட்டும் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி)

மேன்மைக்குரிய அனைத்துச் சாதனைகளும் ஊக்கத்தினாலும் இதயபூர்வமாகவும் செய்யப் பட்டவையே — ஜேம்ஸ் ஆலன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இந்தியாவிடம் உதவி கேட்பதை தடுக்கின்ற சக்தி எது?

இருக்குமிடம் விட்டு இல்லாத இடம் தேடி அலைகின்ற தலைவிதி நம் தமிழ் மக்களுடையதாயிற்று.

ஆம், வெடுக்குநாறிமலை விவகாரம் தொடர்பில் எத்தனை போராட்டங்களை நடத்தினாலும் அதனால் ஆகப்போவது எதுவுமில்லை.

இதையும் கடந்து, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து நிலைமைகளை எடுத்துக்கூறினாலும் அவரும் எந்த நடவடிக்கையும் எடுக்கப் போவதுமில்லை.

ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா.சம்பந்தர் தமிழ் மக்களுக்குக் கிடைத்த எத்தனையோ அரிய வாய்ப்புக்களை தனது சொந்த நலனுக்காக விட்டுக் கொடுத்து, தமிழ் மக்களின் தலையில் மண்ணைக் கொட்டி விட்டார் என்பது தான் உண்மை.

இந்த அநியாயத்தை இரா.சம்பந்தர் செய்த போது அதனைச் சிலர் சுட்டிக் காட்டியிருந்தனராயினும் அதுபற்றி நம் தமிழ் மக்களும் வாய்மூடி மௌனிகளாக இருந்தனர்.

இப்போது இரா.சம்பந்தர் அடங்கிவிட்டார். முதுமை அவரை இயலாதவராக்கிவிட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அவரைக் குறை அளந்து ஆகப் போவது எதுவுமில்லை.

ஆனாலும் வன்னிப் போரில் எமக்கு ஏற்பட்ட இழப்புக்களை எமது பலமாக்கி சர்வதேச அழுத்தத்தின் மூலம் எங்களின் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்க முடியும்.

ஆனால் அந்த அருமந்த சந்தர்ப்பங்கள் அனைத்தையும் இரா.சம்பந்தர் பயன்படுத்தாமல், விட்டுக் கொடுத்தார் என்பதையாவது நாம் உணர்ந்து கொண்டால் மட்டுமே அதிலிருந்து கற்றுக்கொள்ள முடியும்.

இப்போதுகூட, வெடுக்குநாறிமலை விவகாரம் தொடர்பில் நாம் முறையிட வேண்டியது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம்.

ஆனால் இதுவரை நாம் அதனைச் செய்யவில்லை. பிரதமர் மோடியுடன் தொடர்பாடலை மேற்கொள்வதில் நிர்வாக இடர்பாடுகள் உண்டென்றால், அதனை ஏற்றுத்தானாக வேண்டும்.

இங்குதான் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலையுடன் தொடர்பை ஏற்படுத்தி, வெடுக்குநாறிமலை விவகாரத்தை தெரியப்படுத்தி அவரூடாக பிரதமர் மோடிக்கு குறித்த விவகாரத்தை எடுத்துச் செல்ல முடியும்.

இந்த நடைமுறை நமக்குத் தெரியாததல்ல. ஆனாலும் அதனைச் செய்வதற்கு நாம் தயாரில்லை எனும்போதுதான்; இலங்கையில் சைவ சமயத்துக்கு நடக்கின்ற நிட்டூரத்தை இந்தியப் பிரதமர் மோடியின் கவனத்துக்குக் கொண்டுவருவதைத் தடுப்பதில் ஒரு பலமான சக்தி பின்னணியில் உண்டென்பதை உணரமுடிகிறது.

எதுஎவ்வாறாயினும் தமிழ் இனம் என்ற பேரால் சமகால இந்திய மத்திய அரசு தலையிடத் தயங்கினாலும் சைவ சமயத்தின் பேரால் இந்தியப் பிரதமர் மோடி எங்கள் விடயத்தில் தலையிடுவார் என்பது நிறுதிட்டமான உண்மை.

எனவே அத்தகைய தலையீட்டை ஏற்படுத்துவதில் தீவிரம் காட்டாமல்; ஆர்ப்பாட்டம், பேரணி என்பவற்றின் மூலம் வெடுக்குநாறிமலைப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதுதான் நிதர்சனமான உண்மை.

## விருந்தக உரிமையாளர்
## கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு படுகொலை

வெலிகம - மிரிஸ்ஸ கடற்கரைப்பகுதிக்கு அருகில் உள்ள விருந்தக உரிமையாளர் ஒருவர் கூரிய ஆயுதமொன்றினால்தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்.

மிரிஸ்ஸ - பரகல்ல பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய ஒருவரே நேற்று முற்பகல் இவ்வாறு கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்கரைக்கு அருகில் உள்ள மரமொன்றை வெட்டுவது தொடர்பில் விருந்தக உரிமையாளர்கள் இருவருக்கு இடையே தகராறு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த விருந்தக உரிமையாளர்களில் ஒருவரே இந்த கொலையை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,10)

## கடமை தவறிய பொலிஸார் பணி இடை நீக்கம்

(அம்பலாங்கொடை)

கடமை தவறிய குற்றச்சாட்டின் கீழ் இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிமற்றும்போதைப் பொருள் வியாபாரியான "சமன் கொல்லே" என்பவரின் வீட்டில் அண்மையில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

இது தொடர்பில்பொலிஸ் அவசர பிரிவுக்கு கிடைத்த தகவல் தொடர்பில் பொலிஸ் தலைமையக பரிசோதகருக்கு அறிவுறுத்தாமை இந்த பணி இடைநீக்கத்திற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பணி இடைநீக்கம் செய்யப்பட்டவர்களும் தொலைபேசி இயக்குனரா கவும், கணனி செயற்பா ட்டாளராகவும் கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7,10)

## யுக்திய சுற்றி வளைப்பு 1,067 பேர் கைது

கடந்த 24 மணித்தியாலங்களில் மேற்கொள்ளப்பட்ட யுக்திய சுற்றிவளைப்பில் மேலும் 1,067 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் போதைப்பொருட்கள் தொடர்பில் 984 பேர் கைது செய்யப்பட்டதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவு மற்றும் விசேட செயலணியின் ஆவணங்களில் பெயரிடப்பட்டுள்ள 50 சந்தேகநபர்களும் சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், குற்றப் பிரிவின் பட்டியலில் உள்ள 83 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த சுற்றிவளைப்புகளில் ஹெரோயின், ஐஸ், கஞ்சா மற்றும் மாவா உள்ளிட்ட போதைப்பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-7,10)

## கிணற்றில் விழுந்து சிறுமி உயிரிழப்பு

புத்தளம் - மதுரங்குளி பகுதியில் 6 வயது சிறுமி ஒருவர் கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் காலை தனது வீட்டிற்கு அருகில் உள்ள கிணற்றில் தண்ணீர் எடுக்கச் சென்றபோது குறித்த சிறுமி கிணற்றில் வீழ்ந்துள்ளதாக பொலிஸாரின் முதற் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மதுரங்குளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10)

# பரமபிதா காட்டிய பாதை

## இயேசுவை நோக்கிப் பார்ப்போம் மகிழ்ச்சியால் மிளிர்வோம்

தவக்காலத்தின் 5ஆவது ஞாயிறான இன்றைய இறை வார்த்தைகள் பைபிளின் யோவான் நற்செய்தி 12:20-33 பகுதியிலிருந்து வருகிறது. வாழ்க்கையில் எமக்குள்ள காரியங்கள் அனைத்தும் இறைவனுக்கே சொந்தம் என்று பறைசாற்றி அவரைப் புகழ்ந்தேத்த தகுந்த காலமாகக் கருதப்படும் காலம்தான் தவக்காலம் அல்லது நோன்புக்காலம். "தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்துவிடுவர். இவ்வுலகில் தம் வாழ்வைப் பொருட்டாகக் கருதாதோர் நிலை வாழ்வுக்குத்தம்மை உரியவராக்குவார். எனக்குத் தொண்டுசெய்வோர் என்னைப் பின்பற்றட்டும் இவ்வாறான பைபிள் பகுதிகள் மூலம் இயேசுவின் வாழ்வு வெளிப்படுத்தப் படுகின்றது. இவற்றை இவ்வுலக மனிதவாழ்வோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது சவால் நிறைந்ததாக உள்ளது. சாதாரண நடைமுறை வாழ்வுக்குச் சற்று அப்பாற்பட்டது போல உள்ளது. ஆனால் இயேசு இதை வாழ்ந்து தன்னைத் தியாகப் பலியாக்கி உலகிற்கு வாழ்வை வழங்கினார்.

மனிதன் வாழ்வை நேசிக்கின்றான். தன் வாழ்வு ஒரு பெறுமதி மிக்கதாக புகழும், மகிமையும் உள்ளதாக இவ்வுலகில் இருக்க வேண்டும் என்று பாடுபடுகின்றான். நல்லது, ஆனால் பல தடவைகளில் பிறரைப்பற்றிச் சிந்திக்க மறக்கின்றான். இதற்கு நவீனத்துவ காலமும் ஒருகாரணம். ஆனால் எமது வாழ்வு பெறுமதி உள்ளதாக இருக்கவேண்டுமென்றால் சுயநலமின்றி பிறருக்காக வாழவேண்டும். பிறருக்காக வாழ்ந்த பல மனித உள்ளங்கள் இறந்தும் இன்று வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இயேசுவின் வாழ்வே இதற்கு முன்னுதாரணம். 2024ஆம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு மனிதனைப் பற்றி இன்னும் பேசுகின்றோம் என்றால் அவர் தனக்காக வாழாது பிறருக்காக வாழ்ந்ததே அதிமுக்கிய காரணம். இழப்பதனால் புதிய வாழ்வைப் பெறுகின்றோம்.

பிறருக்காக வாழ்தல் என்று சொன்னவுடன் நாம் நினைப்பது பணத்தை ,பொருளை, காணியை, சொத்தை மற்றவர்களுக்குக் கொடுப்பது என்று. இவற்றை விட கொடுப்பதற்கு நிறைய உண்டு. அன்பு, இரக்கம், மன்னிப்பு, மனிதநேயம் என்பன மேலானவை. இவற்றை வாழாது பிறர் பார்க்கவேண்டும் என்பதற்காக ஆடம்பரத்திற்காக, பகட்டுக்காகப்புரியும் செயல்கள் பிறர் நலன் அல்ல. இது எனது சுயநலன். உண்மையாக நாம் பிறருக்காக வாழும்போது ஏதோ ஒன்றை இழந்தே ஆகவேண்டும். இந்த இழப்பு சிலவேளை வேதனையாக துன்பம் நிறைந்ததாகக் கூட இருக்கலாம்.

நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நாம் என்ன செய்யவேண்டும்? என்ற கேள்விக்கு "நீ போய் உமக்கு உள்ளவற்றை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்போது விண்ணகத்தில் நீ செல்வராய் இருப்பீர்." என்றும் நீ போய் உன் அயலானை நேசி என்றும் பைபிளில் சொல்லப்பட்டுள்ளது. நிலை வாழ்வு என்பது, தன்னையே நேசித்து, பூசித்து தன்னிறைவு அடைந்து வாழ்வதில் இல்லை. மாறாகப் பிறரை நேசித்து பிறருக்கு அன்புகாட்டி வாழ்வதில்தான் உள்ளது என்பதை பைபிளில் நற்செய்தி விளக்குகின்றது."மானிடமகன் மாட்சி பெற வேண்டிய நேரம் வந்துவிட்டது. கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அதுஅப்படியே இருக்கும். மடிந்தால் தான் மிகுந்தவிளைச்சல் அளிக்கும்". கோதுமை மணி பலன் தரும் மணியாக மாற அது தன் உருவத்தை இழந்தாக வேண்டும்.

இயேசு இதுவரை தன் நேரம் இன்னும் வரவில்லை என்று கூறியிருந்தும் இன்று தன் நேரம் வந்துவிட்டது என்று சொல்கிறார். எதற்கான நேரம் இது என்று வினவினால் அதுமானிடமகன் மாட்சிபெறும் நேரம். உணவாக மாறி மற்றவரை வாழ்விப்பதும், விதையாக மாறி தன் இனத்தைப் பெருக்குவதும் கோதுமை மணிக்கும் உரிய இயல்புதான். இயேசுவும் தான் மரித்து மண்ணில் புதைக்கப்பட்டு மீண்டும் உயிர்த்தெழுந்து இந்தமானிடம் மீட்பு பெறவேண்டும் என்று விரும்பியதால் தான் நேரம் வந்துவிட்டது என்று கூறுகிறார்.

அவரை நோக்கிப் பார்த்தோர் மகிழ்ச்சியால் மிளிர்ந்தனர். இறைவனின் திருவுளத்தை மட்டுமே நாடும் போது வாழ்க்கை நிறைவானதாக இருக்கும். நீயே ஆசியாக விளங்குவாய். சுய விருப்பத்தைக் கைவிட்டு இறைவனின் திருவிருப்பத்தை நிறைவேற்றும் போதுதானே வாழ்க்கை மகிழ்ச்சியானதாக மாறுகின்றது. அந்தவாழ்வை ஒரு போதும் இழக்காமல் அந்நிலை வாழ்வுக்காக ஏனையவற்றை இழக்க இந்நோன்பு காலத்தில் தயாராவோம். இறை தந்தைக்குக் கீழ்ப்படிந்த இயேசுவைப் போல, கடவுளின் சட்டதிட்டங்களைக்கடைபிடித்து, கோதுமை மணியாய் மடிந்து தமக்கென்று வாழாமல் இறைவனைத்தேடி அவ ருக்காக அவரில் வாழும் புதிய உடன்படிக்கையின் மக்களாக வாழுவோம்

**ம.பிரான்சிஸ்க்,**

**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.**

# குளத்தில்போதிய நீர் இருந்தும் அல்லலுறும் முத்துஐயன்கட்டு மக்கள்

## சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றாகிய முத்துஐயன்கட்டு குளத்தில் தற்போது 23 அடி நீர்மட்டம் காணப்படுகிறது. முன்னைய காலங்களைவிட இவ்வருடம் குளம் முற்று முழுதாக நிரம்பி குளத்தில் தேவையான நீர் காணப்படுகின்ற போதும் உரிய வகையில் தமக்கான நீர் விநியோகம் இடம்பெறாமை காரணமாக தங்களுடைய வான் பயிர்கள் அனைத்தும் அழிவடைவதாகவும் தங்களுடைய கிணற்றில் குடிநீர் கூட இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதெனவும் தமக்கு நீரைத் திறந்து தருவதற்கு உரிய அதிகாரிகளை அனுகியும் இதுவரை எந்தத் தீர்வும் எட்டவில்லை என மக்கள் விசனம் வெளியிட்டனர்.

குளத்துக்கட்டில்இருந்து 300 மீற்றர் தூரத்தில் உள்ள காணியில் உள்ள கிணற்றில் குடிநீருக்கு கூட தண்ணீர் இல்லாத இக்கட்டான நிலைமை இருந்தும் அதிகாரிகள் கண்மூடித்தனமாக இருக்கின்றதாக மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இவ்வாறான நிலையில் மக்கள் தமக்கான நீரைப் பெற்று தருமாறு பல்வேறு கோரிக்கைகளை விடுத்த பின்னணியிலும் இதற்கான முடிவுகள் எட்டப்படாத நிலை காணப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் மற்றும் முத்துஐயன்கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர் குறித்த பகுதிக்கான தொழில்நுட்ப உத்தியோகத்தர் உள்ளிட்டவர்களும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன் மற்றும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோரும் குறித்த முத்துஐயன்கட்டு குளப்பகுதிக்கு வருகை தந்து மக்களுடன் கலந்துரையாடினர்

இதன்போது மக்கள் தமக்கு உரிய நீரினை திறந்து விடாமை காரணமாக பல்வேறு பாதிப்புகளை எதிர்கொள்வது தொடர்பில் இதன்போது கருத்து தெரிவித்தனர்.

பிரதான வாய்க்கால்களில் நீர் திறந்து விடப்பட்டிருக்கின்ற போதும் கிளை வாய்க்கால்களில் நீர் திறக்காமல் இருப்பதால் தாம் பாதிக்கப்படுவதாக தெரிவித்தனர்

குறித்த நீர் திறப்பதில் ஒப்பந்த வேலைகள் பூர்த்தியாக்கப்படாத காரணமும் காணப்படுவதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து ஒப்பந்தக்காரர்களுடைய வேலைகள் இடம்பெறாத பகுதிகளிலாவது தமக்கான நீரைப் பெற்று தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர்

இவ்வாறான பின்னிலையில் மக்களின்கோரிக்கையை எழுத்து மூலம் தருமாறும் உரிய அமைப்புகளை அழைத்து மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் தீர்மானம் எடுத்தே 31 ஆம் திகதி நீர் திறப்பதாக தீர்மானிக்கப்பட்டதாகவும் அதற்கு முன்பதாக நீர் திறப்பதற்கு அரசாங்க அதிபருடைய அனுமதியை பெற வேண்டும். ஆகவே எழுத்து மூலம் உரிய அமைப்புகள் ஊடாக கடிதத்தை தருமாறும் தான் அரசாங்க அதிபரோடு கலந்துரையாடி விரைவில் உங்களுக்கான நீரினைப் பெற்றுதருவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் உறுதியளித்தார். (நி-299)

# இயந்திரம் மூலமான நாற்று நடுகை பயிற்சி



(தருமபுரம்)

இயந்திரம் மூலம் நாற்று நடுகைப் பயிற்சியும் செயல்முறையும் பரந்தன் பன்னாங்கண்டி பகுதியில் கடந்த வாரம் நடை பெற்றது.

கிளிநொச்சி விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பயிற்சியில் கிளிநொச்சி கமக்கார அமைப்புகள், கமநல சேவை திணைக்களத்தினர், விவசாய போதனா ஆசிரியர்கள் மற்றும் விவசாயிகள் பங்கேற்று இருந்தனர்.

இயந்திர நாற்று நடுகையின் மூலம் அதிகளவிலான விளைச்சலை பெற முடியும் எனவும் பயிர்செய்கையின் போது குறைந்த அளவிலான உரங்களையே பயன்படுத்துவதாகவும் கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தெரிவித்தார். (5-6-316)

# மாந்தை கிழக்கிற்கான முதன்மை வீதியினை புனரமையுங்கள்

## பொதுமக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கிற்கான முதன்மை வீதி புனரமைக்கப்படாமலே உள்ளது. ஒட்டறித்த குளச் சந்தியில் இருந்து நட்டாங்கண்டல் செல்லும் முதன்மை வீதியே புனரமைக்கப் படாமல் உள்ளது.

பிரதேச செயலர் பிரிவில் 3,500 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றன. இதன் காரணமாக வீதி சீரின்மையால் போக்குவரத்தில் ஈடுபடுகின்ற மக்கள், உற்பத்தி பொருட்களுடன் பயணிக்கும் விவசாயிகள், நோயாளர்கள் எனப் பல தரப்பட்டோரும் பலத்த நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே மாந்தை கிழக்கிற்கான முதன்மை வீதியினை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-350)

# ஜே.வி.பி மாநாட்டை எதிர்த்து கிளிநொச்சியில் தனிநபர் போராட்டம்




(கண்டாவளை)

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் மாநாட்டை எதிர்த்து தனிநபர் ஒருவர் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளார்.

குறித்த போராட்டமானது நேற்று கிளிநொச்சியில் தேசிய மக்கள் சக்தியின் மாநாடு நடைபெறும் மண்டபத்திற்கு எதிரே முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்டக்காரர் ஏந்தியுள்ள பதாதைகளில் "இணைந்த வடக்கு கிழக்கை நீதிமன்றம் வரை சென்று பிரித்த பெருமை ஜேவிபியையே சாரும" "சொந்த இனத்தையே அழித்த ஜேவிபி எங்கள் இனத்துக்கு எவ்வாறு தீர்வு தரும்" போன்ற வாசகங்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. (நி-100-315)

# யாழ்.இந்திய துணைத்தூதரகத்தின் அனுசரணையில் இடம்பெற்ற சித்த மருத்துவ முகாம்

(முறிகண்டி)

யாழ்.இந்திய துணைத்தூதரகத்தின் அனுசரணையில் சித்த மருத்துவ முகாம் நேற்று கிளிநொச்சியில் இடம் பெற்றது.

குறித்த மருத்துவமுகாம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் ஆரம்பமானது. யாழ்.இந்திய துணைத்தூதரகமும் வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த குறித்த மருத்துவமுகாம் சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் இடம் பெற்றது.

நமது பண்டைய தமிழ் மருத்துவ முறைகள் பற்றிய ஆழமான அறிவைப் புதுப்பிக்கவும் பண்டைய மருத்துவ முறையான சித்த மருத்துவ சேவையினை பெறுவதற்காக இந்திய அரசாங்கத்தின் ஆயுஷ் அமைச்சகத்தினால் வழங்கப்படும் நிதி அனுசரணை மூலம் ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-100)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 160 | 180 | 240 | 220 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 | 180 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 300 | 320 |
| தக்காளி | 200 | 250 | 250 | 300 | 220 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 150 | 200 | 120 |
| கோவா | 350 | 300 | 350 | 400 | 250 |
| கரட் | 400 | 450 | 550 | 600 | 250 |
| பூசணி | 180 | 200 | 200 | 300 | 150 |
| புடோல் | 140 | 150 | 160 | 200 | 120 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 400 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 550 | 550 | 600 | 700 | 450 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 400 | 450 |
| வெண்டக்காய் | 200 | 200 | 200 | 400 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 120 | 200 | — |
| பயற்றங்காய் | 400 | 300 | 300 | 400 | 350 |
| லீக்ஸ் | 250 | 300 | 400 | 400 | 200 |
| பீற்றூட் | 300 | 200 | 200 | 300 | 250 |
| கறிமிளகாய் | 400 | 400 | 350 | 500 | 350 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 1000 | 1200 | 500-1000 |
| போஞ்சி | 300 | 250 | 350 | 400 | 280 |
| கத்தரிதம்புள்ள | 180 | 100 | 180 | 200 | — |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 80 | 100 | 50 |
| தேசிக்காய் | 180 | 200 | 200 | 300 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 90 | 80-120 | 50-120 |
| இராசவள்ளி | 400 | 350 | 450 | 400 | — |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 200 | 80 |
| முள்ளங்கி | 100 | 50 | 120 | 200 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 80 | 60 | 100 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | — | 80 | — | 80 |

## மோ.சைக்கிள்...

சாந்தலிங்கம் நிரோஜன் (வயது-21) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

கடந்த திங்கட்கிழமை வேலைக்கு சென்று விட்டு இரவு 10.30 மணியளவில் வீடு திரும்பிய அவர் தலைக்கவசம் இன்றி வீட்டு கேற்றுடன் விழுந்து கிடந்ததாக தெரிவிக்கப்பட்டது.

வீட்டின் நாய் குரைத்ததை தொடர்ந்து வீட்டார் பார்த்தபோதே அவர் மயங்கிய நிலையில் காணப்பட்டார்.

உடனடியாக இரவு 11.00 மணியளவில் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மறுநாள் காலை 5.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு இருந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 12.00 மணியளவில் அவர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் நேற்று சனிக்கிழமை யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.(ம-7,10,60)

## தன நிதானய

திகதி - 2024.03.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1451
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 05 10 45 65
விசேட ஆங்கில எழுத்து: M
Double Chance இலக்கம்: 22395
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

## மஹஜன சம்பத

திகதி: 2024/03/16
சீட்டிழுப்பு இலக்கம்: 5421
ஆங்கில எழுத்து: H
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 1 9 9 6 3 8
தேசிய லொத்தர் சபை

## மெகா பவர்

திகதி: 16/03/2024
சீட்டிழுப்பு இலக்கம்: 1769
வெற்றி எழுத்து: Z
சுப்பர் இலக்க: 07
வெற்றி இலக்கங்கள்: 08 10 39 45
Double Chance: 04404
இணையம்: www.nlb.lk

## லக்கி 7 VIP

திகதி: 2024.03.16
சீட்டிழுப்பு இலக்கம்: 0247
ஆங்கில எழுத்து: A
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 1 6 2 0 4 9
L7 எழுத்து: A
தேசிய லொத்தர் சபை

## கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம்: 3663
சீட்டிழுப்பு திகதி | 16.03.2024
ஆங்கில எழுத்து: Q
வெற்றி இலக்கங்கள்: 16 59 62 68
விசேட வெற்றி எழுத்து: Q
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம்: 98493
தேசிய லொத்தர் சபை

## HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி: 2024.03.16
சீட்டிழுப்பு இலக்கம்: 0730
வெற்றி இலக்கினம்: மீனம்
வெற்றி இலக்கங்கள்: 43 52 54 59
விசேட இலக்கினம்: மீனம்
தன யோக இலக்கம்: 09480
தேசிய லொத்தர் சபை நாளுக்கான வித்தியை: 26

## யாழைச்...

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 24 வயதான இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் கட்டாரின் டோஹா நோக்கிச் செல்வதற்காக விமான நிலையத்திற்கு வந்துள்ளதாகவும் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபர் வழங்கிய கனேடிய கடவுச்சீட்டில் சந்தேகம் எழுந்ததால், விமான நிலைய அதிகாரிகள் அவரை விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வு எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு மேலதிக விசாரணைக்காக பரிந்துரைத்துள்ளனர்.

இதன்போது முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் கடவுச்சீட்டு போலியானது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

## ஜனாதிபதி...

வழிபாட்டில் ஈடுபட்ட எண்மர் நெடுங்கேணிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பது குறித்து கலந்துரையாடுவதற்கு சி.வி.விக்னேஸ்வரன் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தார்.

கலந்துரையாடலானது நேற்று பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனின் இல்லத்தில் நடைபெற்றது.

இதன்போது, நாளை திங்கட்கிழமை அன்று ஜனாதிபதியை கொழும்பில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி கைதானவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், புளொட்டின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ரெலோவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், தமிழ்த் தேசிய கட்சியின் தலைவரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான சிறிகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ம-7,10,33)

## நீரில் மூழ்கிய...

வீட்டுத்திட்டத்தைச் சேர்ந்த அவந்திகா விஜயகாந் (வயது-10) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

கடற்கரைக்கு அருகிலுள்ள நீர்த் தேக்கத்தில் நீராடிக் கொண்டிருந்த போதே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,10,33,60)

## '107'...

இந்த சேவை முற்றிலும் தமிழ் மொழியில் செயற்படுத்தப்படுவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டுதலுக்கு அமைவாக இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (ம-7,10)

## வெடுக்குநாறி...

வெடுக்குநாறி மலையில் கைது செய்யப்பட்டர்களின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட வாகனப் பேரணியானது வவுனியா பழைய பேருந்து நிலையத்தை வந்தடைந்ததைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டப் பேரணி ஆரம்பமானது.

கைது செய்யப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப் பேரணியானது வவுனியா, பழைய பேருந்து நிலையத்தில் ஆரம்பித்து அங்கிருந்து மணிக்கூட்டு கோபுர சந்தியை அடைந்து, பசார் வீதியூடாக சென்று ஹொரவப்பொத்தானை வீதியை அடைந்து அங்கு வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள தொல்பொருள் திணைக்களத்தை முற்றுகையிட்டு கோசம் எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரர்கள், பின்னர் கண்டி வீதி ஊடாக சென்று வவுனியாச் சிறைச்சாலை முன்றலில் தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டவர்கள் "பொலிஸ் அராஜகம் ஒழிக, வெடுக்குநாறி எங்கள் சொத்து, கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய், வழிபாட்டு உரிமையை தடுக்காதே, சிவ வழிபாட்டை தடை செய்யாதே, வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம், இராணுவமே வெளியேறு, பொய் வழக்கு போடாதே, பௌத்தமயமாக்கலை உடனே நிறுத்து" என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர்.

இதன்போபது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கையில், சிவராத்திரி வழிபாட்டை குழப்பி பொலிஸார் அராஜகத்தை கட்டவிழ்த்து கைது செய்யப்பட்டு பொய்க் குற்றச்சாட்டின் கீழ் சிறையில் இருக்கும் பூசகர் உள்ளிட்ட 8 பேரும் விடுவிக்கப்பட வேண்டும். அவர்களின் விடுதலைக்காக நாம் தொடர்ந்தும் போராடுவோம் எனத் தெரிவித்தனர்.

இக்கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் எழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள், சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் மதகுரு அருட்தந்தை ரமேஸ், கிறிஸ்தவ மத குருமார், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ம-7,10,250)

## வெடுக்குநாறிமலையில்...

மத நிகழ்வுகள் ஏற்பாட்டில் ஈடுபட்டிருந்த பூசகர், பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் வழிபாட்டுக்கு வந்தவர்கள் மீது பொலிஸாரினால் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறையும் அவர்களை மிகவும் கீழ்தரமான முறையில் நடத்தியமையையும் யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## உத்தியோகபூர்வ முடிவுகள்

கோடிக்கணக்கான வெற்றிகளை கொண்டுவரும் சுபிரி தன சம்பத
16.03.2024 | வெற்றி வாரம் 129 | வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து: Y
மற்றும் வெற்றி இலக்கம்: 7 5 0 2 5 6
G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,279,912.00
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
* இதன்போது சுப்பர் பரிசுப்பொதி வெல்லப்படின் செல்லுபடியாவது அன்றைய தினத்திற்குரிய பரிசுப்பொதியாகும்.
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## SUPER BALL சுப்பர் போல்

சீட்டிழுப்பு வாரம்: 2395 | வர்ணம்: நீலம்
சீட்டிழுப்பு திகதி: 16.03.2024 | தினம்: சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 06 24 50 64
ஆங்கில எழுத்து: N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 78,575,882.40
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
* இதன்போது சுப்பர் பரிசுப்பொதி வெல்லப்படின் செல்லுபடியாவது அன்றைய தினத்திற்குரிய பரிசுப்பொதியாகும்.

## சனிதா Shanida

திகதி: 2024.03.16 | வெற்றி வாரம்: 4556 | வர்ணம்: இளம் பச்சை
வெற்றி இலக்கங்கள்: 10 32 57 67
ஆங்கில எழுத்து: Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,196,876.40
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## ராசி அதிர்ஷ்டம்

சீட்டிழுப்பு வாரம்: 4107 | வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2024.03.16 | தினம்: சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 16 21 27 28
கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.11,961,457.60
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546/47 அரிசு அழைப்பு: 0114 824 824
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
* இதன்போது சுப்பர் பரிசுப்பொதி வெல்லப்படின் செல்லுபடியாவது அன்றைய தினத்திற்குரிய பரிசுப்பொதியாகும்.

## கப்ருக

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 03 | 01 | 43 | 64 | 72
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம்: 1571
வர்ணம்: சிவப்ப
திகதி: 16.03.2024
சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 512,242,834.20
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி : 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## அத கோடிபதி ADA KOTIPATHI

சனிக்கிழமை
வெற்றி வாரம் : 2221
வர்ணம் : மஞ்சல்
சீட்டிழுப்பு திகதி : 2024.03.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.99,416,245.60
வெற்றி இலக்கங்கள்: 08 32 40 62
ஆங்கில எழுத்து: Y
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

## சாரதி தேவை

வான், ஆட்டோ ஓடத்தெரிந்தவராகவும் அலுவலக வேலைகளுக்கு உதவுபவராகவும் இருக்க வேண்டும்.

சம்பளம்: 40'000/-




வயது: 21 முதல் 40 வரை

தொடர்புக்கு:-

0777068777

(C-8545)

## மணமகள் தேவை

புலோலி, இந்து கௌரவ குடும்பம், 1988, மிருகசீரிடம், லண்டன் பிரஜை மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. பட்டதாரி / ஆங்கில மொழித் திறமையுடன் விரும்பத்தக்கது.

**071 828 7793**
**077 160 3060**

(C-8542)

## Rooms வாடகைக்கு விடப்படும்

சுண்டிக்குழி பழைய பூங்காவின் அண்மையில் சகல வசதிகளையும் கொண்ட 2 அறைகள் வாடகைக்கு விடப்படும். நேரில் வந்து பார்வையிட்டு பேசிக்கொள்ளலாம். சிறு குடும்பம் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: (048)

**0777 777 384**

## V2 VISA SERVICES

கனடா Visit Visas

Air Tickets

077 77 20 322
077 77 19 322

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8545)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30% *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

(19346)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

**076 636 3378 | 076 097 3127**

# காணி விற்பனைக்கு உண்டு

**நெல்லியடி நகரத்தில் 10 பரப்பு (நீலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- நெல்லியடி நகரத்தில் இருந்து 2Km தூரத்தில்
- விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் இருந்து 500 m தூரத்தில்
- உச்சி அம்மன் கோயில் அருகாமையில்
- 16 அடி பாதையுடன் இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- பெற்றோல் செற் முன் வீதியில் 2Km தூரத்தில் நெல்லியடி பொலிஸ் நிலைய அருகாமை வீதியில் 2Km தூரம்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் ரூபாய் மட்டும் (500 000/=)

(099)

பார்வையிடும் நேரம் காலை 8மணி முதல் மாலை 6 மணி வரை

**தொடர்பு : 071 173 3911, 076 853 5022**

## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 259 /= | |
| 1 Kg அரிசி மா | - 199 /= | |
| 1 Kg Prima கோதுமை | - 188 /= | |
| 1 Kg றவை | - 290 /= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 288 /= | |
| 1 Kg சம்பா | - 230 /= | |
| 10 Kg விஜிதா நாடு | - 1940 /= | |
| 180 ml Chik சம்போ | - 390 /= | ~~480/=~~ |
| 300 g நெஸ்டமோல்ட் | - 580 /= | ~~620/=~~ |
| 1 Kg Sunny சலவைதூள் | - 290/= | ~~380/=~~ |
| 750 ml New VSP நல்லெண்ணை | - 1455 /= | ~~1550/=~~ |
| 180 g Protinex | - 1799 /= | ~~2000/=~~ |
| 01 Sunlight சவர்க்காரம் | - 140 /= | ~~150/=~~ |
| 400 g Anlene அன்லீன் | - 1259 /= | ~~1350/=~~ |

450/=




~~930/=~~

1060/=




~~1110/=~~
(Max 02)

**யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்**

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.


பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

(119)

Happy Supermarket
0777 8080 30

# 27ஆம் ஆண்டு குருபூசை

**தவத்திரு வே.முருகேசு சுவாமி அவர்களின் 27ஆம் ஆண்டு குருபூசை நிகழ்வு**



மேற்படி குருபூசை நிகழ்வானது 18.03.2024 திங்கட்கிழமை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும். விசேட பூசை வழிபாடுகளோடு ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் சுவாமி அவர்களின் நினைவுப் பேருரையுடன் கூடிய அறுபத்து மூவர் குருபூசையுடன் இடம் பெறும்.

வருடாந்த கும்பாபிஷேகத் தினம் 09.04.2024 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் 1008 சங்காபிஷேக நிகழ்வுடன் கூடிய சண்முக அர்ச்சனையும் சந்நிதி வேலவனது வீதி வலமும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில் அன்னதான நிகழ்வும் இடம்பெறும். சுவாமி அவர்களின் அன்பர்கள், அடியவர்கள் மேற்குறிப்பிட்ட இரு நிகழ்வுகளிலும் பங்கு பற்றி குரு அருளையும் திரு அருளையும் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு.

சுவாமி அவர்களின்
அடியவர்கள் சார்பில்
ஆ.அருணாசலம்

(C-8536)

# SMART TECH SOLUTION

Since 2009

**உங்கள் பாதுகாப்பில் நாங்கள் அக்கறை கொள்கின்றோம்**


HIKVISION உங்கள் சொத்துக்களை பாதுகாக்க சிறந்த CCTV தொழில்நுட்பவியலாளரை தெரிவு செய்யுங்கள்

EZVIZ Security Video For Smart Life



- 15 வருட அனுபவம் வாய்ந்த சேவை.
- பொருத்துனர் மற்றும் விற்பனையாளர்களுக்கு 30% விலைக்கழிவு
- 1000க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள்.
- வாடிக்கையாளர் அழைப்புகளுக்கு 100% பதிலளிக்கப்படும். (விற்பனைக்கு பிந்திய சேவை)
- நட்பு ரீதியான வாடிக்கையாளர் சேவை.
- எமது வாடிக்கையாளர்களிடமிருந்து எமது சேவைத்தரத்தை அறிந்து கொள்ளலாம்.


புதுவருடத்தை முன்னிட்டு சிறப்பு விலைக்கழிவு



- 4G SIM பயன்படுத்தக்கூடிய வசதி
- ஆள் நடமாட்டத்தைக் கண்காணித்து ஒலி எழுப்பக்கூடிய வசதி
- 360° சுற்றிப்பார்க்கக் கூடிய வசதி
- இருவழி ஒலித் தொடர்பாடல் வசதி
- கமராவில் பதிவு செய்த வீடியோக்களை அலைபேசியில் பார்க்கும் வசதி
- இரவிலும் பகல் போல் தெரியும் (Colour night vision)
- இணையத்திலும் வீடியோக்களை சேமித்து வைக்கும் வசதி

8500/= இல் இருந்து (நிபந்தனைக்குட்பட்டது)

WARRANTY 2 YEARS



திறந்து இருக்கும் நேரம் : திங்கள், சனி காலை 9.00 - மாலை 6.00 மணி

(117)

No.282, Hospital Road, Jaffna.
Facebook.com/smarttechsolution.lk
+94 71 684 3023
www.smarttechsolution.lk

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.03.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.